# இந்திய அரசியலமைப்பின் வரலாறு

## கி.பி. 1773 முதல் கி.பி. 1950 வரை



பாடத்தொகுப்பு


பாட ஆசிரியர்

**முனைவர் நா. சேதுராமன்**

உதவிப் பேராசிரியர்

வரலாற்றுத்துறை

பெரியார் கலைக் கல்லூரி

கடலூர் - 607 001

# BACHELOR OF ARTS
# B.A. HISTORY
# DEGREE COURSE
# CBCS PATTERN
**(With effect from 2017-2018)**

## SEMESTER V
## PAPER – 12

## CONSTITUTIONAL HISTORY OF INDIA FROM A.D.1773 TO A.D.1950

### UNIT I

Historical Background - Regulating Act of 1773 - Pitt's India Act of 1784.

### UNIT II

Charter Act of 1793 - Charter Act of 1813 - Charter Act of 1833 - Charter Act of 1853.

### UNIT III

Queen's Proclamation - Government of India Act of 1858 - Indian Council's Act of 1861 - Indian Council's Act of 1892 - Minto - Morley Reforms of 1909.

### UNIT IV

Montagu's Declaration - Government of India Act of 1919 - Working of Dyarchy - Simon Commission - Round Table Conferences.

### UNIT V

Government of India Act of 1935 - Working of Provincial Autonomy - Indian Independence Act of 1947 - Indian Constitution of 1950.

**Reference Books:**


1. Pylee, M.V. *India's Constitution*, New Delhi: S. Chand & Co, 2005.
2. Pylee, M.V. *Constitutional History of India*, New Delhi: S. Chand & Co. 2003.
3. Agarwal, R.C. *Constitutional Development and National Movement in India*, New Delhi: S. Chand & Co., 2005.
4. Kapur, A.C. & Mishra, K.K. *Select Constitution*, New Delhi: S. Chand & Co, 2005.
5. Agarwal, R.C. *Indian Political System*, New Delhi: S. Chand & Co, 2003.

# பொருளடக்கம்


பக்கம்

பாடம் 1 வரலாற்றுப் பின்னணி ........ 3

பாடம் 2 1773-ம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் ........ 5

பாடம் 3 1784-ம் ஆண்டு பிட்டின் இந்தியா சட்டம் ........ 8

பாடம் 4 1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம் ........ 11

பாடம் 5 1813-ம் ஆண்டு பட்டயச் சட்டம் ........ 13

பாடம் 6 1833-ம் ஆண்டு பட்டயச் சட்டம் ........ 16

பாடம் 7 1853-ம் ஆண்டு பட்டயச் சட்டம் ........ 20

பாடம் 8 பேரரசியின் பிரகடனம் ........ 23

பாடம் 9 1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் ........ 25

பாடம் 10 1861-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் ........ 28

பாடம் 11 1892-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் ........ 32

பாடம் 12 மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள் 1909 ........ 35

பாடம் 13 மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் 1919 ........ 39

பாடம் 14 சைமன் குழு ........ 47

பாடம் 15 வட்ட மேஜை மாநாடுகள் ........ 50

பாடம் 16 1935-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் ........ 54

பாடம் 17 இந்திய விடுதலைச் சட்டம், 1947 ........ 64

பாடம் 18 இந்திய அரசியலமைப்பு 1950 ........ 66

# பாடம் 1
# வரலாற்றுப் பின்னணி
## (Historical Background)

இந்திய அரசியலமைப்பு என்பது இந்தியாவின் உயர்ந்தபட்ச சட்டமாகும். உலகின் மிகப்பெரிய குடியரசு நாடான சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு, உலகிலேயே மிக நீளமான அரசியலமைப்பாகும். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் அரசியலமைப்பிற்கு மிகப் பெரிய வரலாற்றுப் பின்னணியும் சிறப்புகளும் உண்டு.

கிழக்கிந்தியத் தீவுகளுடனும், இந்தியாவுடனும் வாணிபம் செய்து பொருளீட்டும் நோக்கத்துடன் 1600-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியை பிரிட்டனின் அரசி முதலாம் எலிசபெத் துவக்கி வைத்தார். கம்பெனிக்குச் சில வாணிக உரிமைகளையும் அரசியின் சாசனம் (Queen's Charter) வழங்கியது. இக்கம்பெனி 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் வாணிகத் துறையில் ஈடுபட்டுப் பெரும் பொருள் திரட்டியது. பின்னர், மண்ணாசை வயப்பட்டு சிறு நிலப்பகுதிகளைக் கவர்ந்து தொழிற்கிடங்குகளை அமைத்துக்கொண்டது, பாதுகாப்பிற்காகக் கோட்டைகளைக் கட்டி அவற்றில் படை வீரர்களையும் அமர்த்தியது.

இந்நிலையில் இந்தியாவில் பரந்துவிரிந்த பரப்பை ஆட்சி செய்து வந்த முகலாயப் பேரரசும் வீழ்ச்சியுறவே, சிற்றரசர்கள் தன்னாதிக்க வெறியால் தனியரசுகளைத் தோற்றுவிக்கப் பெரும் போராட்டத்தில் இறங்கினர். இதனால் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைப் பயன் கொண்ட ஆங்கிலக் கிழந்தியக் கம்பெனி, இந்திய அரசியலில் தலையிட்டது. அவர்களின் தலையீட்டின் முதல் வெற்றியாகப் பிளாசிப் போர் (1757) அமைந்தது. இவ் வெற்றியால் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா முதலிய பகுதிகளில் தங்களின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டியதோடு, பக்ஸார் (1765) போருக்குப் பின்னர் 'திவானி' என்னும் நிலவரியை வசூலிக்கும் உரிமையையும் பெற்றனர்.

வங்காளத்தின் நவாபைக் கைப்பாவையாக்கி இந்திய அதிகாரிகள் சிலரின் உதவியுடன் ஆங்கிலேயர் வங்காளத்தை ஆளத் தொடங்கினர். இவ்வாறு இந்தியாவில் அப்போது நிலவிய அரசியல் சூழ்நிலையின் காரணமாக, வாணிகக் குழுவினர் ஆட்சியார்களாக மாறியபொழுது பெரும் நிலப்பரப்பைப் பொறுப்புடன் ஆளுகின்ற தகுதியும் திறனும் இல்லாது இருந்தனர்.

அவர்களின் திறனில்லா ஆட்சியின் காரணமாக வங்காளம் பெரும் துயரில் ஆழ்ந்தது. ஆகவே ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் போக்கை இங்கிலாந்தின் பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வன்மையாகக் கண்டித்தனர். எனவே, கம்பெனியின் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியப் பகுதிகளை

நல்ல முறையில் ஆட்சி செய்ய உதவும் வகையில் 1773-ம் ஆண்டு ஒழுங்குமுறைச் (Regulating Act, 1773) இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றியது. இவ்வொழுங்குமுறைச் சட்டத்தின் பயனாகக் இந்தியவில் கம்பெனியின் ஆட்சி ஆங்கிலப் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு வந்தது.

1773-ம் ஆண்டு இங்கிலாந்தின் பாராளுமன்றத்தால் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியை ஒழுங்குபடுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டமே, இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியின் வரலாற்றில் ஒரு முதல்படி எனக் கருதலாம்.

அதுமுதற்கொண்டு, இங்கிலாந்து பாராளுமன்றம் மாறிவந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவ்வப்போது புதிய சட்டங்களை இயற்றி இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியை ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் முயன்றது. அவ்வகையில், 1784-ம் ஆண்டு பிட்டின் இந்தியா சட்டம், 1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம், 1813-ம் ஆண்டு பட்டயச் சட்டம், 1833-ம் ஆண்டு பட்டயச் சட்டம், 1853-ம் ஆண்டு பட்டயச் சட்டம் ஆகிய சட்டங்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்டன.

1857-ம் ஆண்டு ஏற்பட்ட இந்தியப் பெருங்கலகத்தின் காரணமாக, இந்தியாவின் ஆட்சி கம்பெனியிடமிருந்து நேரடியாக ஆங்கில முடியாட்சியின் வசம் சென்றது. 1858-ம் ஆண்டு வெளியிடப்பட்ட பேரரசியின் பிரகடனம் வாயிலாக இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி இந்தியாவின் பேரரசியாக அறிவிக்கப்பட்டார்.

அதன் பின்னரும், இந்திய ஆட்சியை முறைப்படுத்துவதற்காக, சூழ்நிலையின் தேவை கருதி இங்கிலாந்து பாராளுமன்றம் அவ்வப்போது புதிய சட்டங்களை இயற்றியது. அவ்வகையில், 1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம், 1861-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம், 1892-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம், 1909-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் (மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள்), 1919-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் (மாண்டேகு - செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள்) மற்றும் 1935-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் ஆகியவை கொண்டு வரப்பட்டன.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக 1947-ம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டம் இங்கிலாந்து பாரளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, அதன்படி 15 ஆகஸ்ட் 1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது.

இதற்கிடையில், இந்திய அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல், ஜூலை 1946-ல் நடைபெற்றது. டிசம்பர் 1946-ல் அரசியல் நிர்ணய சபை கூடி, இந்தியாவிற்கான அரசியலமைப்பை உருவாக்கியது. 26 ஜனவரி 1950-ல் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு, இந்தியா குடியசு நாடாகியது.

# பாடம் 2

# 1773-ம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம்

## (Regulating Act of 1773)

**1773-ம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் என்றால் என்ன?**

வங்காளத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிப் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 1773-ம் ஆண்டு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் சட்டமாக இயற்றப்பட்டது ஒழுங்குமுறைச் சட்டம் ஆகும்.

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகச் சீர்கேடுகளால், அது திவால் ஆகும் நிலை ஏற்பட்டது. ஆகவே கம்பெனி விவகாரங்களில் அரசாங்கம் தலையிட வேண்டியதன் காரணமாக இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய உடைமைகள் தொடர்பாக, அதன் அதிகாரங்களை வரையறுக்கும் முதல் நாடாளுமன்ற அங்கீகாரமாக இச்சட்டம் இருந்தது.

**சட்டம் இயற்றப்பட்டதற்கான பின்னணி / காரணங்கள்**

- கிழக்கிந்தியக் கம்பெனி கடுமையான நிதி நெருக்கடியில் இருந்தது.
- 1772-ல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் 1 மில்லியன் பவுண்டுகள் கடன் கேட்டது.
- நிறுவன அதிகாரிகள் மீது ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் எழுந்தன.
- வங்காளத்தில் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டது. அதில் பெரும் மக்கள் அழிந்தனர்.
- வங்காளத்தில் ராபர்ட் கிளைவால் ஏற்படுத்தப்பட்ட இரட்டை நிர்வாக முறை சிக்கலானதாக இருந்தது. அது குறித்து நிறைய புகார்கள் எழுந்தன.
- அந்த நிர்வாக முறையின் படி, கம்பெனிக்கு வங்காளத்தில் திவானி உரிமைகள் (பக்சர் போருக்குப் பிறகு பெறப்பட்ட) மற்றும் நவாப் முகலாய பேரரசரிடமிருந்து பெறப்பட்ட நிஜாமாத் உரிமைகள் (நீதி மற்றும் காவல் உரிமைகள்) இருந்தன.
- நடைமுறையில், இரு அதிகாரங்களும் கம்பெனியிடமே இருந்தன.

- தங்கள் முன்னேற்றம் புறக்கணிக்கப்பட்டதால் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர் மற்றும் கம்பெனி வருவாயை அதிகரிப்பதில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தது.

- இதனால், வங்காளத்தில் சட்டவிரோத செயல்பாடுகள் அதிகரித்தன.

- 1769-ல் மைசூரின் ஹைதர் அலிக்கு எதிரான போரில் கம்பெனி தோற்றது.

**ஒழுங்குமுறைச் சட்டத்தின் கூறுகள்**

- இந்த சட்டம் கம்பெனி இந்தியாவில் அதன் நிலஉடைமைகளை வைத்திருக்க அனுமதித்தது.

- ஆனால் நிறுவனத்தின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த முயன்றது.

- இச்சட்டம் முழுமையாக அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை, எனவே 'ஒழுங்குபடுத்துதல்' என்று அழைக்கப்பட்டது.

- இச்சட்டம், ஒரு கவர்னர் ஜெனரலை நியமிக்க வகை செய்தது. அத்துடன் நான்கு கவுன்சிலர்களுடன் சேர்த்து, வில்லியம் கோட்டை (கல்கத்தா) மாகாணத்தின் தலைமை கவர்னர் ஜெனரல் கவுன்சில் என அழைக்கப்பட்டது.

- இதன் படி, வாரன் ஹாஸ்டிங்ஸ் வில்லியம் கோட்டை மாகாணத்தின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

- சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் ஆளுநர்கள் வங்காளத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டனர். (குறிப்பாக வெளியுறவுக் கொள்கை தொடர்பான விஷயங்களில்)

- ஆதனால், வங்காளத்தின் அனுமதியின்றி இந்திய அரசுகளுக்கு எதிராக அவர்களால் போர் தொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

- கம்பெனியில் இயக்குனர்கள் ஐந்தாண்டுகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- அவர்களில் நான்கில் ஒரு பங்கு பேர் ஒவ்வொரு ஆண்டும் ஓய்வு பெற வேண்டும்.

- மேலும், அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

- கம்பெனி இயக்குநர்கள் வருவாய், சிவில் மற்றும் இராணுவ விவகாரங்கள் தொடர்பான அனைத்து கடிதப் போக்குவரத்துகளையும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென பணிக்கப்பட்டிருந்தது.

- முதல் தலைமை நீதிபதியாக சர் எலியா இம்பேயுடன் கல்கத்தாவில் ஒரு உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்டது.

- ஆனால், இங்கிலாந்தில் இருந்து நீதிபதிகள் வர வேண்டியிருந்தது.

- அது இந்திய மக்கள் மீது அல்லாமல், பிரிட்டிஷ் பிரஜைகள் மீது சிவில் மற்றும் குற்றவியல் அதிகார வரம்பு இருந்தது,

**ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைபாடுகள்**

- கவர்னர் ஜெனரலுக்கு முழுமையான அதிகாரம் ஏதுமில்லை.

- நிறுவனத்திற்கு வருவாய் செலுத்தும் இந்திய மக்களின் கவலைகளை அது தீர்க்கவில்லை.

- அது கம்பெனி அதிகாரிகள் மத்தியில் ஊழலைத் தடுத்து நிறுத்தவில்லை.

- உச்ச நீதிமன்ற அதிகாரங்கள் சரியாக வரையறுக்கப்படவில்லை.

- கம்பெனியின் நடவடிக்கைகளில் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு மற்றும் கவர்னர்-ஜெனரல் கவுன்சில் அனுப்பிய அறிக்கைகளை ஆய்வு செய்ய எந்த வழிமுறையும் இல்லை என்பதால் இச்சட்டம் பயனற்றதாகவே கருதப்பட்டது.

# பாடம் 3
# 1784-ம் ஆண்டு பிட்டின் இந்தியா சட்டம்

**(Pitt's India Act, 1784)**

### பிட்டின் இந்தியா சட்டம் என்றால் என்ன?

பிட்டின் இந்தியா சட்டம் அல்லது ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனிச் சட்டம், 1784 என்பது இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்றத்தால் 1784-ம் ஆண்டு இயற்றப்பட்ட ஒரு சட்டம்.

இந்தியத் துணை கண்டத்தில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியையும் நடவடிக்கைகளையும் இங்கிலாந்து அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த அப்போதைய இங்கிலாந்து பிரதமர் இளைய வில்லியம் பிட் பெயரால் இந்தச் சட்டம் "பிட்டின் இந்தியா சட்டம்" என அழைக்கப்பட்டது.

இச்சட்டம், இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பனியின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை கம்பெனியும் இங்கிலாந்து அரசும் கூட்டாக நிருவாகம் செய்ய ஒரு கட்டுப்பாட்டுப் வாரியத்தை அமைத்தது.

### சட்டம் உருவான காரணம் / பின்னணி

- 1773-ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அதற்கேற்பட்ட நிதிப்பற்றாக்குறையைப் போக்க ஆங்கிலேய அரசின் உதவியை நாடியது.
- இந்தியாவிலிருந்த கம்பெனியின் அதிகாரிகளிடையே ஊழல் மலிந்திருந்த காரணத்தால், நிதி உதவி செய்வதற்கு நிபந்தனையாக, நிறுவனச் செயல்பாடுகளை மேற்பார்வையிட ஒரு சட்டத்தை ஆங்கிலேய அரசு ஏற்படுத்தியது.
- 1773-ம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act of 1773) என்றழைக்கப்பட்ட இதற்கு முந்தைய சட்டம் தோல்வியடைந்தது.
- கம்பெனியின் செயல்பாடுகளில் காணப்பட்ட முறைகேடுகளையும் ஊழலையும் அதனால் தடுக்க முடியவில்லை.
- அதனால், அச்சட்டத்தின் குறைபாடுகளைத் தீர்க்க 1784-ல் ஆங்கிலேய பிரதமர் வில்லியம் பிட் ஒரு புதிய சட்டத்தை இயற்றினார்.

**சட்டத்தின் கூறுகள்**

- அரசியல் விஷயங்களுக்காக, கட்டுப்பாட்டு வாரியம் (Board of Control) உருவாக்கப்பட்டது மற்றும் வணிக விவகாரங்களுக்காக, இயக்குநர்கள் குழு (Court of Directors) நியமிக்கப்பட்டது.

- கட்டுப்பாட்டு வாரியம் சிவில் மற்றும் இராணுவ விவகாரங்களை கவனித்துக் கொண்டது. இது 6 உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது.
  - அரசு செயலர் (கட்டுப்பாட்டு வாரியத் தலைவர்)
  - கருவூலத்தலைவர்
  - நான்கு பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள்

- இந்த இரட்டை கட்டுப்பாட்டு அமைப்பில், இயக்குநர்கள் குழு என்பது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொறுப்பிலும், கட்டுப்பாட்டு வாரியம் என்பது இங்கிலாந்து அரசாங்கத்தின் பொறுப்பிலும் இருந்தன.

- இந்த சட்டத்தின் மூலம் அனைத்து சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகளும் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் உள்ள தங்கள் சொத்துக்களை அவர்கள் பணியில் சேர்ந்த இரண்டு மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டது.

- கவர்னர் ஜெனரலின் கவுன்சிலின் எண்ணிக்கை மூன்று உறுப்பினர்களாகக் குறைக்கப்பட்டது.

- இந்த மூவரில் ஒருவர் இந்தியாவில் உள்ள இங்கிலாந்து அரசராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருப்பார்.

- கவர்னர் ஜெனரலுக்கு, ‘வீடோ’ அதிகாரம் வழங்கப்பட்டது.

- சென்னை மற்றும் பம்பாய் மாகாணங்கள் வங்காள மாகாணத்திற்கு கட்டுப்பட்டவையாக மாற்றப்பட்டன.

- அதன் விளைவாக, கல்கத்தா இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின் தலைநகரமாக மாறியது.

**சட்டத்தின் முக்கியத்துவம்**

- இச்சட்டம் கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்கு இடையேயான வேறுபாட்டை தெளிவாக வரையறுத்தது.
- முதல் முறையாக “இந்தியாவில் பிரிட்டிஷ் உடைமைகள்” என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

- இச்சட்டத்தின் மூலம் இந்திய நிர்வாகத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் நேரடியாகக் கட்டுப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டது.

- அரசாங்கம் விவகாரங்களை "ஒழுங்குபடுத்த" மட்டுமே முயன்ற நேரடியாகக் கட்டுப்படுத்த முயலாத, முந்தைய 1773-ம் ஆண்டு ஒழுங்குபடுத்தும் சட்டத்தைப் போலல்லாமல், இந்தச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு கீழ்ப்படிந்ததாக கிழக்கிந்தியக் கம்பெனி மாற்றப்பட்டது,

- இச்சட்டம் பிரிட்டிஷ் முடியாட்சியின் அதிகாரத்தை அதன் இந்திய ஆட்சிப் பகுதிகளின் சிவில் மற்றும் இராணுவ நிர்வாகத்தில் ஏற்படுத்தியது.

- ஆயினும், வணிக நடவடிக்கைகள் கம்பெனியின் ஏகபோக உரிமையாக நீடித்தன.

**சட்டத்தின் குறைபாடுகள்**

- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரங்களுக்கும், ஆங்கிலேய அரசின் அதிகாரத்திற்கும் இடையே உள்ள எல்லைகளில் தெளிவு இல்லாததால் இந்த சட்டம் தோல்வி என்று கருதப்பட்டது.

- கிழக்கிந்தியக் கம்பெனி, பிரிட்டிஷ் அரசாங்கம் ஆகிய இரு எஜமானர்களுக்கு கவர்னர் ஜெனரல் சேவை செய்ய வேண்டியிருந்தது.

- கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் மற்றும் கம்பெனியின் இயக்குநர் குழு ஆகியவற்றின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் குறித்து தெளிவான வரையறைகள் இல்லை.

- அதனால், கவர்னர் ஜெனரல் தனது விருப்ப அதிகாரத்தைப் பயன்படுத்தி சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்படக்கூடிய உடனடி முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது.

# பாடம் 4
# 1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம்
## (Charter Act of 1793)

**1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம் என்றால் என்ன?**

1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம் என்று அழைக்கபட்ட, 1793-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி சட்டம் என்பது, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சாசனத்தை புதுப்பித்த இங்கிலாந்து பாராளுமன்றத்தின் சட்டம் ஆகும்.

**சட்டத்தின் கூறுகள்**

- இச்சட்டம் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதிகளில் கம்பெனியின் ஆட்சி தொடர வழிவகை செய்தது.
- இச்சட்டம் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோக வர்த்தக மேலும் 20 ஆண்டுகளுக்குத் தொடர வாய்ப்பளித்தது.
- இச்சட்டம் "முடியாட்சியில் குடிமக்கள் இறையாண்மையை கையகப்படுத்தல் என்பது அரசரின் சார்பாகவே தவிர, அவர்களின் சொந்த உரிமையில் இல்லை" என்பதைத் தெளிவுபடுத்தியது.
- அவ்வகையில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் செயல்பாடுகள் அனைத்தும் இங்கிலாந்து அரசாங்கத்தின் சார்பாகவே செய்யப்பட வேண்டும் என இச்சட்டம் கூறியது.
- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்கு ஈவுத்தொகையினை 10% உயர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- கவர்னர் ஜெனரலுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன.
- சில சூழ்நிலைகளில் அவர் தனது கவுன்சிலின் முடிவையும் மீறி செயல்படலாம்.
- சென்னை மற்றும் பம்பாய் ஆளுநர்கள் மீது அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.
- கவர்னர் ஜெனரல் சென்னை அல்லது பம்பாயில் இருக்கும்போது, சென்னை, பம்பாய் ஆளுநர்கள் மீது அவர் மேலதிகாரம் கொண்டவராக இருப்பார்.

- வங்காளத்தில் கவர்னர் ஜெனரல் இல்லாத சூழ்நிலையில், அவரது கவுன்சிலின் சிவிலியன் உறுப்பினர்களில் இருந்து ஒருவரை துணைத் தலைவராக அவர் நியமிக்கமுடியும்.

- கட்டுப்பாட்டு வாரியத்தின் கட்டமைப்பு மாற்றி அமைக்கப்பட்டது.

- ஒரு தலைவரும் இரண்டு இளநிலை உறுப்பினர்களும் இருக்க வேண்டும். அவர்கள் பிரிவி கவுன்சிலின் உறுப்பினர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

- ஊழியர்கள் மற்றும் கட்டுப்பாட்டு வாரியத்தின் சம்பளம் இப்போது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொறுப்பில் விடப்பட்டது.

- அனைத்து செலவுகளுக்கும் பிறகு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆண்டுதோறும் இந்திய வருவாயிலிருந்து ரூ.5 லட்சம் இங்கிலாந்து அரசுக்குச் செலுத்த வேண்டும்.

- ஆயினும், சூழ்நிலை கருதி, தேவை ஏற்பட்டால், பாதுகாப்புக் காரணங்களுக்காக வருவாய் முழுவதையும் பயன்படுத்த இங்கிலாந்து மன்னராட்சி உத்தரவிடுவதற்கும் இந்தச் சட்டத்தில் விதி இருந்தது.

- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூத்த அதிகாரிகள் அனுமதி இல்லாமல் இந்தியாவை விட்டு வெளியேற தடை செய்யப்பட்டனர். மீறி அவ்வாறு செய்தால் அது ராஜினாமாவாக கருதப்படும்.

- இந்தியாவில் வர்த்தகத்தை நடத்த தனிநபர்கள் மற்றும் கம்பெனியின் ஊழியர்களுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்பட்டது.

- இது “சிறப்புரிமை” அல்லது “நாட்டு வணிகம்” என்று அழைக்கப்பட்டது.

- இது சீனாவுக்கு அபின் ஏற்றுமதி செய்ய வழிவகுத்தது.

- இச்சட்டம் வருவாய் நிர்வாகம் மற்றும் நீதித்துறையின் பணிகளைப் பிரித்தது. மால் அதாலத் எனப்பட்ட வருவாய் நீதிமன்றங்கள் இதனால் மறைந்தன.

- பின்னர் 1813-ம் ஆண்டு பட்டயச் சட்டம் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பட்டயம் புதுப்பிக்கப்பட்டது.

# பாடம் 5
# 1813-ம் ஆண்டு பட்டயச் சட்டம்
## (Charter Act of 1813)

**1813-ம் ஆண்டு பட்டயச் சட்டம் என்றால் என்ன?**

இங்கிலாந்து பாராளுமன்றத்தால் 1813-ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டயச் சட்டம், 1813-ம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இச்சட்டம் கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தை மேலும் 20 ஆண்டுகளுக்கு புதுப்பித்தது.

மேலும், இந்தியாவில் ஆங்கிலேயர் வசம் இருந்த பிரதேசங்களுடைய அரசியலமைப்பு குறித்த நிலைப்பாட்டை முதன் முறையாக வரையறுத்ததில் இந்தச் சட்டம் மிக முக்கியமானது.

**சட்டத்தின் பின்னணி**

- 1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம் கிழக்கிந்திய கம்பெனிக்கு 20 வருட காலத்திற்கு கிழக்கத்திய நாடுகளோடு வர்த்தகம் செய்வதற்கான ஏகபோக உரிமையை வழங்கியது.

- அதேசயம், ஐரோப்பாவில் பிரான்ஸின் நெப்போலியன் போனபார்ட்டுடைய எழுச்சி இங்கிலாந்து நாட்டு வணிகர்களுக்கு ஒரு பெரும் நெருக்கடியான காலகட்டத்தை உருவாக்கியது.

- நெப்போலியன் போனபார்ட் 1806-ம் ஆண்டு பெர்லின் ஆணையையும், 1807-ம் ஆண்டு மிலன் ஆணையையும் அமல்படுத்தினார்.

- 1806-ம் ஆண்டு பெர்லின் ஆணை பிரான்சுடன் இணைந்த அல்லது சார்ந்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்து நாட்டின் பொருட்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்தது.

- பின்னர் 1807-ம் ஆண்டு வெளியிடப்பட்ட மிலன் ஆணை எந்தவொரு ஐரோப்பிய நாடும் இங்கிலாந்து நாட்டின் பொருட்களை இறக்குமதி செய்யக் கூடாது என தடைசெய்தது.

- பிரான்சுக்கு எதிரான கூட்டணிகளை ஊக்குவிப்பதிலும் நிதியளிப்பதிலும் முக்கிய சக்தியாக இருந்த இங்கிலாந்தினைக் கட்டுப்படுத்துவதற்காக, நெப்போலியன் அந்த இரு ஆணைகளையும் வெளியிட்டார்.

- நெப்போலியன் போனபார்ட்டினால் ஐரோப்பாவில் கொண்டுவரப்பட்ட இந்த முறை கண்டத் திட்டம் அல்லது கண்ட முற்றுகை என்று அழைக்கப்பட்டது.

- இந்த கண்ட முற்றுகையால் வாணிபம் பாதிக்கப்பட்ட இங்கிலாந்து நாட்டு வர்த்தகர்கள் ஆசியாவின் துறைமுகங்களுக்குள் நுழைந்து வர்த்தம் செய்வதற்கு ஏதுவாக கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோகத்தை நீக்குமாறு இங்கிலாந்து அரசைக் கோரினர்.

- அதே காலகட்டத்தில், "பொருளாதாரத்தின் தந்தை" அல்லது "முதலாளித்துவத்தின் தந்தை" என்று அழைக்கப்படுகின்ற, ஸ்காட்லாந்து நாட்டு பொருளாதார அறிஞர் ஆடம் ஸ்மித்தின் சுதந்திர வர்த்தகக் கொள்கை கோட்பாடும் மிகவும் பிரபலமடைந்தது.

- இந்தக் கொள்கையின் ஆதரவாளர்கள் இந்தியாவுடனான வர்த்தகத்தில் கிழக்கிந்திய கம்பெனியின் ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் இங்கிலாந்து வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் வளர்ச்சி மேம்படும் என வாதிடத் துவங்கினர்.

- ஆனால், கிழக்கிந்திய கம்பெனி இவ்வாறான வாதங்களை எதிர்த்தது.

- அதனுடைய அரசியல் அதிகாரத்தையும் வணிக சலுகைகளையும் பிரிக்க முடியாது என வாதிட்டது.

- பின்னர், கடுமையான வர்த்தக உரிம முறையின் கீழ் அனைத்து இங்கிலாந்து வணிகர்களும் இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய அனுமதித்ததன் மூலம் இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டது.

**சட்டத்தின் கூறுகள்**

- இந்த சட்டம் இந்தியாவில் இருந்த ஆங்கிலேயரின் உடைமைகள் மீது இங்கிலாந்து முடியாட்சியின் இறையாண்மையை உறுதிப்படுத்தியது.

- இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி மேலும் 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

- அதேசமயம், தேயிலை மற்றும் அபின் ஆகியவற்றில் சீனாவுடனான வர்த்தகம் தவிர கம்பெனியின் வர்த்தக ஏகபோகம் முடிவுக்கு வந்தது.

- மேலும், இச்சட்டம், உச்சநீதிமன்றத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு வரி விதிக்க உள்ளூர் அரசாங்கங்களுக்கு அதிகாரம் அளித்தது.

- தனிநபர்கள் மீது வரி விதிக்கவும், அவர்களுக்கு பணம் செலுத்தாதவர்களை தண்டிக்கவும் இந்த சட்டம் இந்தியாவின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளித்தது.

- கம்பெனியின் பங்கு ஈவுத்தொகை 10.5% ஆக நிர்ணயிக்கப்பட்டது.

- இந்த சட்டம் இந்தியாவில் வசித்த ஐரோப்பிய மற்றும் இங்கிலாந்து மக்கள் மீது இந்தியாவில் இருந்த நீதிமன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியது.

- கிறிஸ்தவ மிஷனரிகள் இந்தியாவுக்கு வந்து கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்தில் ஈடுபட அனுமதி வழங்கியது இந்தச் சட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் ஆகும்.

- மேலும், ஆங்கில இந்தியாவுக்கான பிஷப்பை நியமனம் செய்வதிலும் கிறிஸ்தவ மிஷனரிகள் வெற்றி பெற்றனர். மேலும், இச்சட்டத்தின் படி கல்கத்தாவில் அவரது தலைமையகம் அமைந்தது.

- இந்திய இலக்கியங்களைப் புதுப்பித்தல் மற்றும் அறிவியலை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கும் இந்த சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

- இச்சட்டத்தின் மூலம் கம்பெனி தன்னுடைய ஆட்சியின் கீழ் இருந்த இந்தியர்களின் கல்வியில் பங்கு வகிக்க இருந்தது. அதற்காக ஒவ்வொரு ஆண்டும் 1 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்ட வேண்டும் எனக் கூறப்பட்டது.

- தார்மீக மற்றும் மத மேம்பாடுகளை ஊக்குவிப்பதற்காக இந்தியா செல்ல விரும்பும் நபர்களுக்கும் இந்த சட்டம் அனுமதி வழங்கியது. (கிறிஸ்தவ மிஷனரிகள்)

- இந்தச் சட்டம் கம்பெனியின் பிராந்திய வருவாய் மற்றும் வணிக இலாபங்களை முறைப்படுத்தியது.

- அதனுடைய பிராந்திய வருவாய் மற்றும் வணிக கணக்குகளை தனித்தனியாக வைக்கும்படி கேட்கப்பட்டது.

- கம்பெனியின் கடன் குறைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

- 1813-ம் ஆண்டு பட்டயச் சட்டம் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த பிரதேசங்களின் அரசியலமைப்பு நிலைப்பாட்டை முதன்முறையாக வெளிப்படையாக வரையறுத்ததைத் தவிர, இந்தியாவில் ஆளுகை அடிப்படையில் கணிசமான எதையும் மாற்றவில்லை.

# பாடம் 6
# 1833-ம் ஆண்டு பட்டயச் சட்டம்
## (Charter Act of 1833)

**1833-ம் ஆண்டு பட்டயச் சட்டம் என்றால் என்ன?**

1833-ம் ஆண்டு பட்டயச் சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தை மேலும் 20 ஆண்டுகளுக்கு புதுப்பித்தது.

இது 1833-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் அல்லது 1833-ம் ஆண்டு செயிண்ட் ஹெலினா சட்டம் என்றும் அழைக்கப்பட்டது. தென் அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் இருக்கும் செயிண்ட் ஹெலினா தீவின் கட்டுப்பாடு கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து இங்கிலாந்து முடியாட்சிக்கு மாற்றப்பட்டது.

**சட்டத்தின் பின்னணி / காரணம்**

- இங்கிலாந்தில் தொழில்துறை புரட்சியின் காரணமாக உற்பத்தி பெருமளவில் அதிகரித்தது. ஆகவே உற்பத்தியை விற்பதற்கான சந்தையாக இங்கிலாந்து இந்தியாவைப் பார்க்கத் தொடங்கியது.
- கிழக்கிந்தியக் கம்பெனி பிராந்திய விரிவாக்கக் கொள்கையைப் பின்பற்றியது.
- மேலும், அக்காலகட்டத்தில் இங்கிலாந்தில் தாராளவாத சீர்திருத்த இயக்கம் நடந்து கொண்டிருந்தது.

**சட்டத்தின் அம்சங்கள்**

- ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக நடவடிக்கைகள் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டன.
- கம்பெனி பிரிட்டிஷ் இந்திய உடைமைகளை நிர்வகிப்பதற்கான ஒரு நிர்வாக அமைப்பாக மாற்றப்பட்டது.
- கம்பெனியின் சீனாவுடனான வர்த்தக தொடர்புகளும் மூடப்பட்டன.
- இந்தச் சட்டம் ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவில் சுதந்திரமாக குடியேற அனுமதி அளித்தது.

- இந்தச் சட்டம் இந்திய நாட்டின் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை சட்டப்பூர்வமாக்கியது.

- கம்பெனி இன்னும் இந்திய பிரதேசங்களைக் கையில் வைத்திருந்தது, ஆனால் அது கம்பெனி மீது முடியாட்சியின் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருந்தது.

**சட்டத்தின் விதிகள்**

- இந்தியா ஒரு பிரிட்டிஷ் காலனியாக மாறியது.

- வங்காள கவர்னர்-ஜெனரல் என்பது இந்திய கவர்னர் ஜெனரல் எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

- அதனால், வங்காள கவர்னர்-ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக ஆனார்.

- இதனால், நாட்டின் நிர்வாகம் ஒரே கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

- பம்பாய் மற்றும் சென்னை ஆளுநர்கள் தங்களின் சட்டமியற்றும் அதிகாரங்களை இழந்தனர்.

- இந்திய கவர்னர் ஜெனரலுக்கு பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் சட்டமியற்றும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

- இங்கிலாந்துக்காரர்கள், வெளிநாட்டினர் அல்லது இந்திய பூர்வீக மக்கள் என பிரிட்டிஷ் இந்தியப் பிராந்தியங்களில் வசிக்கும் அனைத்து மக்கள் மற்றும் இடங்கள் தொடர்பான எந்தவொரு சட்டத்தையும் திருத்தவோ, ரத்து செய்யவோ அல்லது மாற்றவோ கவர்னர் ஜெனரலின் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

- கம்பெனியின் சிவில் மற்றும் இராணுவ விவகாரங்கள் கவர்னர் ஜெனரலின் சபையால் கட்டுப்படுத்தப்பட்டன.

- கவர்னர் ஜெனரல் கவுன்சில் நான்கு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. நான்காவது உறுப்பினருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே இருந்தன.

- முதல் முறையாக, கவர்னர் ஜெனரலின் அரசாங்கம் இந்திய அரசு என்றும், அவரது சபை இந்திய கவுன்சில் என்றும் அழைக்கப்பட்டது.

**இந்திய சட்ட ஆணையம்**

- இச்சட்டத்தின் மூலம் இந்திய சட்ட ஆணையம் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் செயல்படுத்தப்படும் எந்தவொரு சட்டமும் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும் என்றும், அது 'சட்டம்' என்று அழைக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சட்டம் கட்டளையிட்டது.

- இந்தச் சட்டத்தின்படி, ஒரு இந்திய சட்ட ஆணையம் நிறுவப்பட்டது.

- முதல் சட்ட ஆணையம் மெக்காலே பிரபுவை அதன் தலைவராகக் கொண்டிருந்தது.

- இந்திய சட்ட ஆணையம் அனைத்து இந்திய சட்டங்களையும் முறைப்படுத்தி தொகுக்க முயன்றது.

**வங்காள மாகாணத்தை பிரித்தல்**

- வங்காள மாகாணத்தை ஆக்ரா மாகாணம் மற்றும் வில்லியம் கோட்டை மாகாணம் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்க இந்த சட்டம் வகை செய்தது.

- ஆனால் இது ஒருபோதும் நடைமுறைக்கு வரவில்லை. பின்னர் விலக்கிக்கொள்ளப்பட்டது.

**அரசு சேவையில் இந்தியர்கள்**

- நாட்டின் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு பங்கு இருக்க அனுமதி அளித்த முதல் சட்டம் இதுவேயாகும்.

- பிறப்பு, நிறம், மதம் அல்லது இனம் அடிப்படையில் அல்லாமல் தகுதி என்பதே அரசு வேலைக்கான அடிப்படையாக இருக்க வேண்டும் என அச்சட்டம் குறிப்பிட்டது.

**அடிமைமுறை ஒழிப்பு**

- அந்த நேரத்தில் இந்தியாவில் இருந்த அடிமைமுறையை ஒழிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்தது.

- இங்கிலாந்து பாராளுமன்றம் இங்கிலாந்திலும் அதன் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளிலும் 1833-ம் ஆண்டு அடிமை முறையை ஒழித்தது.

**கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவு**

- நாட்டில் இங்கிலாந்து நாட்டு குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததால், இந்தியாவில் மூன்று பிஷப்புகளை வைத்திருக்க இந்த சட்டம் அனுமதித்தது.
- மேலும், இந்தியாவில் கிறிஸ்தவ நிறுவனங்களை நிறுவுவதை ஒழுங்குபடுத்தவும் இந்தச் சட்டம் முயன்றது.

**சட்டத்தின் முக்கியத்துவம்**

- இது இந்தியாவின் நிர்வாகத்தை மையப்படுத்தப்பட்ட ஒன்றாக அமைத்ததில் முதல் படியாகும்.
- கிழக்கிந்திய கம்பெனியின் வணிக நடவடிக்கைகளின் முடிவு மற்றும் இந்தியாவை நிர்வகிப்பதில் பிரிட்டிஷ் முடியாட்சியின் அறங்காவலராக அது மாற்றப்பட்டது.
- மெக்காலேவால் சட்டங்கள் முறைப்படுத்தி தொகுக்கப்பட்டன.
- அரசுப் பணியில் இந்தியர்களுக்கு வாய்ப்பு.
- இந்திய கவர்னர் ஜெனரல் சபையின் நிர்வாக மற்றும் சட்டமன்றப் பணிகளைப் பிரித்தல்.
- இந்தியாவின் செல்வ வளத்தைச் சுரண்டுதல்
- கம்பெனியின் கடன்களை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது.
- மேலும், கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அடுத்த 40 ஆண்டுகளுக்கு இந்திய வருவாயில் இருந்து அவர்களின் மூலதனத்தில் 10.5% ஈவுத்தொகையை செலுத்த ஒப்புக்கொண்டது.
- இது இந்தியாவிற்கு சுமையைச் சேர்த்தது மற்றும் இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டுவதில் ஒரு முக்கிய அங்கமாக நிரூபிக்கப்பட்டது.

# பாடம் 7

# 1853-ம் ஆண்டு பட்டயச் சட்டம்

## (Charter Act of 1853)

**1853-ம் ஆண்டு பட்டயச் சட்டம் என்றால் என்ன?**

1853-ம் ஆண்டு பட்டயச் சட்டம் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தை புதுப்பிக்க இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. டல்ஹௌசி பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது.

கம்பெனியின் சாசனத்தை 20 ஆண்டுகளுக்குப் புதுப்பித்த, 1793, 1813 மற்றும் 1833-ம் ஆண்டுகளின் முந்தைய பட்டயச் சட்டங்களைப் போலல்லாமல்; இந்தச் சட்டம் கம்பெனியின் சாசனம் புதுப்பிக்கப்படும் கால அளவைக் குறிப்பிடவில்லை.

**சட்டத்தின் விதிகள்**

**கவர்னர் ஜெனரல் அலுவலகம்**

- ஆறு உறுப்பினர்களைக் கொண்ட சட்டமியற்றும் குழுவில் இப்போது 12 உறுப்பினர்கள் இருந்தனர்.

- சட்ட உறுப்பினர் (நான்காவது உறுப்பினர்) வாக்களிக்கும் உரிமையுடன் முழு உறுப்பினரானார்.

- 12 உறுப்பினர்கள்:
  - கவர்னர் ஜெனரல் - 1
  - தலைமைத் தளபதி - 1
  - கவர்னர் ஜெனரல் கவுன்சிலின் உறுப்பினர்கள் - 4
  - கல்கத்தாவில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி - 1
  - கல்கத்தா உச்சநீதிமன்றத்தின் நீதிபதி - 1
  - வங்காளம், பம்பாய், சென்னை மற்றும் வடமேற்கு மாகாணங்களின் உள்ளூர் அரசாங்கங்களால் நியமிக்கப்பட்ட, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணியாற்றிய கம்பெனியின் பிரதிநிதிகள் - 4

- கவர்னர் ஜெனரல் சட்டமியற்றும் குழுவிற்கு துணைத் தலைவரை நியமிக்க அதிகாரம் வழங்கப்பட்டது.

- அனைத்து சட்டமன்ற முன்மொழிவுகளுக்கும் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் கட்டாயமாக்கப்பட்டது.

- இயக்குநர்கள் குழுவானது புதிதாக ஒரு மாகாணத்தை உருவாக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

- விரிவடைந்துவந்த இந்தியப் பிரதேசங்களை நிர்வகிப்பதில் ஏற்பட்ட சிரமங்களே இதற்குக் காரணம்.

- 1833 மற்றும் 1853 ஆண்டுகளில் சிந்து மற்றும் பஞ்சாப் என்ற இரண்டு புதிய மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

- இந்த மாகாணங்களுக்கு ஒரு துணைநிலை ஆளுநரை நியமிக்க இந்தச் சட்டம் வகை செய்தது.

- 1859-ம் ஆண்டு பஞ்சாபிற்கு துணைநிலை ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

- மேலும், இந்தச் சட்டம் அஸ்ஸாம், பர்மா மற்றும் மத்திய மாகாணம் போன்றவற்றையும் உருவாக்க வழிவகுத்தது.

- வங்காள ஆளுநர் பதவிக்கு தனி ஆளுநரை நியமிக்க இந்த சட்டம் வழிவகை செய்தது.

- வங்காள ஆளுநர் பதவி என்பது இந்தியா முழுமைக்குமான நிர்வாகத்தின் தலைவராக இருந்த இந்திய கவர்னர் ஜெனரல் பதவியில் இருந்து வேறுபட்டு இருக்க வேண்டும் என அச்சட்டம் கூறியது.

- மேலும், இயக்குநர்கள் குழுவின் எண்ணிக்கை 24-ல் இருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது. அதில் 6 பேர் இங்கிலாந்து முடியாட்சியால் பரிந்துரைக்கப்பட்டனர்.

## இந்திய குடிமைப் பணியின் துவக்கம்

- இச்சட்டத்தின்படி, 1854-ம் ஆண்டில் மக்காலே கமிட்டி இந்தியாவிற்கான சிவில் சர்வீஸ் பணிகள் குறித்த தனது முதல் பரிந்துரைகளை வழங்கியது.

- மேலும், இந்தச் சட்டம் இயக்குநர்கள் குழுவால் நடத்தப்படும் குடிமைப் பணியில் நியமனங்கள் வழங்குவதற்கான உரிமையை நீக்கியது.

- நியமனம் தகுதி அடிப்படையில் திறந்த போட்டியால் மட்டுமே செய்யப்பட வேண்டும். வாய்ப்புகள் அனைவருக்கும் திறந்திருந்தது.
- ஐ.சி.எஸ் பதவிக்குப் 'பொருத்தமானவர்' மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைத்தது.

**சட்டத்தின் முக்கியத்துவம்**

- முதல் முறையாக, இந்திய கவர்னர் ஜெனரல் கவுன்சிலின் சட்டமன்ற மற்றும் நிர்வாக செயல்பாடுகள் பிரிக்கப்பட்டன.
- இந்த சட்டம் நவீன பாராளுமன்ற வடிவிலான அரசாங்கத்திற்கான அடித்தளமாக அமைந்தது.
- கவர்னர் ஜெனரல் கவுன்சிலின் சட்டமன்றப் பிரிவு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மாதிரியில் பாராளுமன்றமாக செயல்பட்டது.
- இது முந்தைய பட்டயச் சட்டங்களைப் போலன்றி காலவரையறையின்றி கம்பெனிக்கான விதிகளை நீட்டித்தது.
- எனவே, எந்த நேரத்திலும் நிர்வாகத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் கையகப்படுத்தலாம் என்ற நிலை ஏற்பட்டது.
- இந்தச் செயலால் கம்பெனியின் செல்வாக்கு மேலும் குறைக்கப்பட்டது.
- மேலும், இயக்குநர்கள் குழுவில் இப்போது முடியாட்சியால் பரிந்துரைக்கப்பட்ட 6 உறுப்பினர்கள் இருந்தனர்.
- இந்தியக் குடிமைப் பணிகள் இந்தியர்கள் உட்பட அனைவருக்கும் திறந்திருந்தது.
- இதனால், பரிந்துரையின் மூலம் நியமனங்கள் செய்யப்படும் முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, திறந்த மற்றும் நியாயமான போட்டியின் மூலம் நியமனம் செய்யும் முறை தொடங்கியது.
- முதல் முறையாக, வங்காளம், பம்பாய், சென்னை மற்றும் வடமேற்கு மாகாணங்களின் உள்ளூர் அரசாங்கங்களைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களின் வடிவத்தில் சட்டமன்ற சபையில் உள்ளூர் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பாராளுமன்றம் வேறு வழிகாட்டுதல் வழங்கும் வரையில் இந்தியப் பிரதேசங்கள் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் என இந்த சட்டம் தெளிவுபடுத்தியது.

# பாடம் 8
# பேரரசியின் பிரகடனம்

## (Queen's Proclamation)

1857-ம் ஆண்டு இந்தியப் பெருங்கலகம் இங்கிலாந்து அரசாங்கத்தை 1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தை நிறைவேற்ற கட்டாயப்படுத்தியது. அதற்கு சில மாதங்களுக்குப் பிறகு விக்டோரியா மகாராணி இந்தியாவில் "சிற்றரசர்கள், தலைவர்கள் மற்றும் இந்திய மக்கள்" ஆகியோருக்கு தன்னுடைய பிரகடனத்தை வெளியிட்டார்

1 நவம்பர் 1858 அன்று, அலகாபாத்தில் ஒரு பெரிய தர்பார் கூட்டப்பட்டது. அதில் வைஸ்ராய் கேனிங் பிரவு விக்டோரியா மகாராணியின் வெளியிட்டார்.

**பேரரசியின் பிரகடனத்தின் முக்கியக் கூறுகள்**

- பேரரசியின் பிரகடனம் இங்கிலாந்து மகாராணி இந்திய அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டதை அறிவித்தது.
- மேலும், அந்தப் பிரகடனம் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்கால கொள்கைகளையும் அறிவித்தது.
- இந்திய சுதேச அரசர்களின் பிரதேசங்கள் இங்கிலாந்து அரசாங்கத்தால் இணைத்துக் கொள்ளப்படாது என உறுதி அளிக்கப்பட்டது.
- மேலும், சுதேச அரசர்களின் தத்தெடுப்பதற்கான உரிமை அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் உறுதி அளித்தது.
- இதன்மூலம் இந்திய சுதேச அரசர்களின் அச்சத்தைப் அகற்ற இப்பிரகடனம் முயன்றது.
- இந்தியாவில் உள்ள தனது ஊழியர்கள் இந்தியர்களின் மத விவகாரங்களில் தலையிடக் கூடாது என்று பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டது.
- இந்தியாவில் சட்டம் இயற்றும் போது, இந்தியர்களின் பழக்கவழக்கங்கள், பண்டைய சடங்குகள், பழக்க வழக்கங்கள் குறித்து உரிய மரியாதை அளிக்கப்படும்.
- இதன்மூலம் ஆங்கிலேயர்கள் தங்கள் மத விவகாரங்களில் தலையிடமாட்டார்கள் என்ற இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டது.

- இங்கிலாந்துப் பேரரசின் மற்ற பகுதிகளிலும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு இணையாக இந்தியப் பிரஜைகள் அறிவிக்கப்பட்டனர்.

- இந்தியர்களுக்கும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கும் சம உரிமைகளும் வாய்ப்புகளும் உறுதி செய்யப்பட்டன.

- பிரிட்டிஷ் குடிமக்களை கொலை செய்த குற்றத்திற்கு ஆளாகாத, பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய அனைத்து இந்தியர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி செய்துகொண்ட ஒப்பந்தங்கள் அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டன.

- விக்டோரியா மகாராணியின் பிரகடனத்தில் இந்தியர்கள் பற்றிய பின்வரும் அறிவிப்பு இருந்தது: "அவர்களின் செழிப்பு எங்கள் வலிமை இருக்கும், அவர்களின் திருப்தி எங்கள் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நன்றி எங்களுக்கான சிறந்த வெகுமதி".

- 1858-ம் ஆண்டு விக்டோரியா மகாராணியின் பிரகடனம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு மாபெரும் மைல்கல்லாக இருந்தது.

- 1917-ம் ஆண்டு இந்தியா தொடர்பாக பிரிட்டிஷ் அரசாங்கம் புதிய அறிவிப்பை வெளியிடுகின்ற வரையில் இந்திய நிர்வாகத்தின் அடிப்படையாக இந்தப் பிரகடனமே இருந்தது.

# பாடம் 9

# 1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம்

## (Government of India Act 1858)

**1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் என்றால் என்ன?**

1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் என்பது இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் 2 ஆகஸ்ட் 1858 அன்று நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் ஆகும்.

இச்சட்டத்தின்படி, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்டது. பிரிட்டனின் இந்தியப் பிரதேசங்கள் பிரிட்டிஷ் பேரரசியின் பெயரில் நிர்வகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இயக்குநர்கள் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை அகற்றப்பட்டன. கம்பெனியின் இயக்குநர்கள் குழிவிடம் இருந்த அதிகாரங்கள் அனைத்தும் இச்சட்டத்தின் மூலம் இங்கிலாந்தில் இருந்த இந்தியச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

**சட்டத்திற்கான பின்னணி / காரணம்**

- 1857-ம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற பெருங்கலகம் இங்கிலாந்து அரசாங்கத்திற்கு ஒரு பேரதிர்ச்சியாக இருந்தது.
- சிப்பாய்கள் முன்னின்று நடத்திய அக்கலகத்திற்கு கம்பெனியின் கொள்கைகளே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டதால், இங்கிலாந்தில் கம்பெனிக்கு எதிராக பரவலான அதிருப்தி இருந்தது.
- இங்கிலாந்தின் பேரரசியாக இருந்த விக்டோரியா மகாராணி, இந்தச் சட்டத்தின் விளைவாக "இந்தியாவின் பேரரசி" என்ற பட்டத்துடன் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் பிரதேசங்களின் பேரரசியானார்.

**சட்டத்தின் அம்சங்கள்**

- ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி கலைக்கப்பட்டது.
- பிரிட்டனின் இந்திய பிரதேசங்கள் பிரிட்டிஷ் மகாராணியின் பெயரில் நிர்வகிக்கப்பட இருந்தன.
- இயக்குநர்கள் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை அகற்றப்பட்டன.

- கம்பெனியின் இயக்குநர்கள் குழுவின் அதிகாரங்கள் இந்தியச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

- இந்தியச் செயலாளர் ஒரு இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும், இங்கிலாந்து பிரதமரின் கேபினெட் அமைச்சராகவும் இருக்க வேண்டும். அவருக்கு 15 உறுப்பினர்கள் கொண்ட சபை உதவி செய்யவிருந்தது.

- இந்தியச் செயலாளர் பிரிட்டனில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இந்திய நிர்வாகத்திற்கும் இடையிலான தகவல்தொடர்பாளராக இருந்தார்.

- மேலும், தனது சபையுடன் கலந்தாலோசிக்காமல் இந்தியாவுக்கு இரகசிய அனுப்புதல்களை அனுப்பும் அதிகாரமும் அவருக்கு இருந்தது.

- இந்தியச் செயலாளர் மூலம், பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விவகாரங்கள் குறித்து கேள்விகளைக் கேட்கலாம்.

- இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக கவர்னர் ஜெனரல் மற்றும் வைஸ்ராய் இருப்பர். (சிக்கலைத் தவிர்க்க இருவரும் ஒரே நபர்).

- வைஸ்ராய் மற்றும் பல்வேறு மாகாணங்களின் ஆளுநர்கள் இங்கிலாந்து முடியாட்சியால் நியமிக்கப்பட்டனர்.

- வைஸ்ராய்க்கு உதவ ஒரு நிர்வாகக்குழு உருவாக்கப்பட்டது.

- இந்தச் சட்டம் இந்தியாவை நேரடியாக இங்கிலாந்தின் காலனியாக மாற்றியது.

- மேலும், இந்தச் சட்டம் பிட்டின் இந்தியா சட்டத்தின் இரட்டை அரசாங்கத்தை ரத்து செய்தது.

- இந்தச் சட்டம் வாரிசு இழப்புக் கொள்கையையும் முடிவுக்குக் கொண்டுவந்தது .

- இந்திய சிவில் சர்வீஸ் நாட்டின் நிர்வாகத்திற்காக நிறுவப்பட இருந்தது.

- இந்தியர்களையும் சிவில் சர்வீஸ் பணியில் சேர்ப்பதற்கான ஏற்பாடு இருந்தது.

- 560 க்கும் அதிகமான சுதேச அரசுகளை ஆட்சி செய்து வந்த இந்திய மன்னர்கள், பிரிட்டிஷ் மேலதிகாரத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களின் சுயாதீன அந்தஸ்தைப் பெற்று ஆட்சி செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

- இச்சட்டத்தின் மூலமாக முதல் இந்திய செயலராக லார்ட் ஸ்டான்லி என்பவர் நியமிக்கப்பட்டார்.

- இந்தியாவை முடியாட்சியின் கீழ் நேரடியாக ஆளும் முடிவை இங்கிலாந்து பிரதமர் பெஞ்சமின் டிஸ்ரேலி எதிர்த்தார்.

- ஆனால் அவரது சக எம்.பி.க்கள் அவரது கருத்துக்களுடன் உடன்படவில்லை ஆகவே மசோதா இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எளிதில் நிறைவேறியது.

- இச்சட்டத்தின் படி இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் மற்றும் வைஸ்ராய் லார்ட் கேனிங் பிரபு ஆவார்.

# பாடம் 10

# 1861-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்

## (Indian Councils Act 1861)

**1861-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் என்றால் என்ன?**

1861-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் என்பது இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும். இது கவர்னர் ஜெனரல் கவுன்சிலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்தது. மேலும், இச்சட்டம் கல்கத்தாவில் செயல்பட்ட வைஸ்ராயின் நிர்வாகக் குழுவுக்கு பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் அதிகாரம் செலுத்த உரிமை வழங்கியது.

**சட்டத்திற்கான காரணங்கள் / பின்னணி**

- 1858-ம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தில் இந்தியாவில் நிர்வாக அமைப்பு அமைக்கப்படுவது தொடர்பான எந்த ஒரு ஷரத்தும் சேர்க்கப்படவில்லை.

- 1857-ம் ஆண்டு பெருங்கலகம் ஆங்கிலேயர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. எதிர்காலத்தில் இத்தகைய இடர்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க இந்திய பொதுமக்கள் மீது கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

- மேலும், 1857 ஆம் ஆண்டு கலகத்திற்குப் பிறகு, நிர்வாகத்தில் இந்தியர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்தியாவில் அரசாங்கத்தைப் பாதுகாப்பது மிகவும் கடினம் என்று இங்கிலாந்தில் ஒரு பொதுவான கருத்து இருந்தது.

- அதேசமயம், பெருங்கலகத்திற்குப் பிறகு, சர் சையத் அகமது கான் இந்தியர்களையும் இந்தியாவின் நிர்வாகத்தில் ஈடுபடுத்த வேண்டுமென பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அறிவுறுத்தினார்.

- அக்காலத்தில், மிகத் துணிச்சலான விமர்சனம் எனக் கருதப்பட்ட, இந்திய கலகத்தின் காரணங்கள் என்ற அவரது துண்டுப் பிரசுரத்தில், பிரிட்டிஷ் கொள்கைகளே இந்தியாவில் கிளர்ச்சியை ஏற்படுத்தியதாக அவர் குற்றம் சாட்டினார்.

- பிரிட்டிஷார் இந்தியர்களை சட்டமன்றத்தில் அனுமதிக்கத் தவறியதே இந்தியக் கிளர்ச்சிக்கான காரணம் என அவர் வாதிட்டார்.

- அதனால், இந்திய மக்களை நேரடியாகப் பாதித்த அரசாங்கக் கொள்கைகள் குறித்து கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பில்லாமல் போனது. அதுவே கலகத்திற்கு முக்கியக் காரனம் என்றார் அவர்.

**சட்டத்தின் விதிகள்**

- கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் ஐந்தாவதாக நிதி உறுப்பினர் ஒருவர் சேர்க்கப்பட்டார்.

- சட்டமியற்றும் பணிகளுக்காக மத்திய நிர்வாக சபைக்கு 6 முதல் 12 உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

- கூடுதல் உறுப்பினர்களில் குறைந்த பட்சம் பாதியளவு உறுப்பினர்கள் அதிகாரிகள்-அல்லாதவர்களாக இருக்க வேண்டும்.

- அதிகாரிகள்-அல்லாத உறுப்பினர்கள் வைஸ்ராயால் இரண்டு வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டனர்.

- அதன்படி, 1862-ம் ஆண்டில், பெனாரஸ் ராஜா, பாட்டியாலா மகாராஜா மற்றும் குவாலியர் திவான் சர் டிங்கர் ராவ் ஆகிய மூன்று இந்தியர்களை கேனிங் பிரபு கவுன்சிலில் சேர்ப்பதற்குப் பரிந்துரைத்தார்.

- மேலும், கவர்னர் ஜெனரல் / வைஸ்ராய் ஆகியோருக்கு மேலும் சில அதிகாரங்களும் வழங்கப்பட்டன:

- வைஸ்ராய் இல்லாத நேரத்தில் நிர்வாக குழுவின் கூட்டங்களுக்கு தலைமை தாங்க ஒரு தலைவரை நியமிக்க அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

- நிர்வாக சபையின் செயல்பாடுகளை நடத்துவதற்கான விதிமுறைகளையும் உருவாக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டது.

- அவர் சட்டமன்ற நோக்கங்களுக்காக புதிய மாகாணங்களை உருவாக்க முடியும், அவற்றிற்கு லெப்டினன்ட் கவர்னர்களை நியமிக்க முடியும்.

- மாகாணங்களின் வரம்புகளை மாற்றவோ, திருத்தவோ அல்லது சீரமைக்கவோ அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

- அதன்படி, 1862-ல் வங்காளத்திலும், 1886-ல் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும், 1897-ல் பஞ்சாப் மற்றும் பர்மாவிலும் சட்டமன்ற சபைகள் அமைக்கப்பட்டன.

- சட்டமன்றக் குழுவின் ஒப்புதல் இல்லாமல், அவசரகாலத்தில் அவசர ஆணைகளை அவர் பிறப்பிக்க முடியும்.

- பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள அனைத்து நபர்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பான அனைத்து விஷயங்களிலும் சட்டமியற்றுவதற்கு மத்திய கவுன்சிலுக்கு அதிகாரம் வழங்கப்பட்ட போதிலும், நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவிற்கும் வைஸ்ராயின் ஒப்புதல் தேவை என்பது கட்டாயமாக்கப்பட்டது.

- ஒரு மசோதா பிரிட்டிஷ் இந்தியாவின் பாதுகாப்பு, அமைதி மற்றும் நலன்களைப் பாதிக்கிறது என்று அவர் கருதினால், அவர் தனது ஒப்புதலை மறுக்கலாம் அல்லது தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுக்கலாம்.

- அதேசமயம், அனைத்து சட்டங்கள் குறித்தும் இந்திய அரசு செயலருக்கு அவர் தெரிவிக்க வேண்டியிருந்தது. இந்திய அரசு செயலர் முடியாட்சியின் ஒப்புதலுடன் எந்த ஒரு சட்டத்தையும் அனுமதிக்க மறுக்கலாம்.

**போர்ட்ஃபோலியோ முறை (Portfolio System) அறிமுகம்**

- நிர்வாகக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் சிறப்புப் பணியை ஒப்படைக்க கவர்னர் ஜெனரலுக்கு இந்தச் சட்டம் அதிகாரம் அளித்தது.

- அந்த நேரத்தில் கவர்னர் ஜெனரலாகவும் வைஸ்ராயாகவும் இருந்த கேனிங் பிரபு, போர்ட்ஃபோலியோ முறையை அறிமுகப்படுத்தினார்.

- இந்த அமைப்பில், ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட துறையின் போர்ட்ஃபோலியோ ஒதுக்கப்பட்டது.

- அதன்படி உள்துறை, ராணுவம், சட்டம், வருவாய் மற்றும் நிதி ஆகிய துறைகளுக்கான ஐந்து உறுப்பினர்கள் இருந்தனர்.

- இது இந்தியாவில் போர்ட்ஃபோலியோ அமைப்பின் முதல் தொடக்கமாகும்.

**அதிகாரப் பரவலாக்கம்**

- இந்த சட்டம் சென்னை மற்றும் பம்பாயின் ஆளுநர் குழுவின் சட்டமன்ற அதிகாரங்களை மீட்டெடுத்தது (இது 1833-ம் ஆண்டின் சாசனச் சட்டத்தால் பறிக்கப்பட்டதாகும்).

- ஆயினும், சென்னை மற்றும் பம்பாய் அரசாங்கங்களால் நிறைவேற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட அனைத்து சட்டங்களுக்கும் கவர்னர் மற்றும் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் அவசியமானதாகும்.

- மத்திய மற்றும் மாகாண நிர்வாக செயல்பாடுகளுக்கிடையே எந்த வேறுபாடும் செய்யப்படவில்லை.

- ஆனால் பொதுக் கடன், நிதி, நாணயம், தபால் அலுவலகம், தந்தி, மதம்சார்ந்த விஷயங்கள், காப்புரிமை மற்றும் பதிப்புரிமை தொடர்பான நடவடிக்கைகள் ஆகியவை பொதுவாக மத்திய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டன.

**சட்டம் பற்றிய மதிப்பீடு**

- 1861-ம் ஆண்டு கவுன்சில் சட்டம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் முக்கியமானது, ஏனெனில் இது கவர்னர் ஜெனரல் சட்டமியற்றும் பணிகளில் இந்திய மக்களை இணைத்துக்கொள்ள உதவியது.

- இருப்பினும், சட்டமன்ற சபைகள் நிர்வாகத்தை விமர்சிக்கவோ அல்லது சில தகவல்களைக் கேட்கவோ அதிகாரம் இல்லாதவையாகவே இருந்தன.

- இந்தியர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும், அதில் இந்தியர்களை எவ்வாறு சேர்க்க வேண்டும் என்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

- அதனால், சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், பெருமுதலாளிகள் போன்றோரே நியமிக்கப்பட்டனர். இதனால் சட்டமியற்றும் குழுவில் இந்தியப் பொதுமக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்க வாய்ப்பில்லாமல் போனது.

- பம்பாய் மற்றும் சென்னை கவர்னர்களுக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்கியதன் மூலம் நிர்வாகத்தை பரவலாக்க இச்சட்டம் அனுமதித்தது.

- கவர்னர் ஜெனரலுக்கு வழங்கப்பட்ட ஆணையிடும் அதிகாரம் அவருக்கு முழுமையான அதிகாரங்களை அளித்தது.

- சுருங்கக்கூறின், 1861-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் இந்திய மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டது என்றே கூறலாம்.

# பாடம் 11

# 1892-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்

## (Indian Councils Act 1892)

1892-ம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டம் என்பது இந்தியாவில் சட்டசபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்த இங்கிலாந்து பாராளுமன்றத்தின் ஒரு சட்டம் ஆகும்.

**சட்டத்தின் பின்னணி**

- 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய அரசியல் சூழ்நிலைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.
- தேசிய உணர்ச்சியும், ஜனநாயக உணர்ச்சிகளும், ஆங்கிலக் கல்வியும், மேலை நாட்டு விஞ்ஞானமும் படித்தவர்களிடையே வளர ஆரம்பித்தன.
- அதற்கேற்றாற்போல் இந்திய மக்களின் குறைகளை நிவர்த்திக்கும் நோக்கத்துடன் கி.பி. 1885-ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றிவிக்கபட்டது.
- காங்கிரஸில் இருந்த மிதவாதிகள் (Moderates) கி.பி. 1861-ம் ஆண்டுச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டமியற்றும் சபைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனத் தீர்மானம் கொண்டு வந்தனர்.
- இந்தியாவில் உள்ள ஒரு சில ஐரோப்பியர்கள் கூட 1861-ம் ஆண்டுச் சட்டத்தை மாற்றியமைத்து இந்தியர்களுக்கு ஒரு சில சலுகைகள் வழங்கவேண்டும் என்று விரும்பினர்.
- அதன் விளைவாக டப்ரின் பிரபுவின் சிபாரிசின் பேரில் 1892-ம் ஆண்டு கவுன்சில் சட்டத்தை இங்கிலாந்து அரசு கொண்டுவந்தது.

**சட்டத்தின் முக்கியக் கூறுகள்**

- இச்சட்டத்தின்படி மத்திய மற்றும் மாகாணங்களின் சட்டமியற்றும் சபைகள் விரிவாக்கப்பட்டன.
- தலைமை ஆளுநரின் கீழுள்ள சட்டமியற்றும் சபைக்கு 10-க்குக் குறையாமலும், 16-க்கு மேற்படாமலும் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என முடிவாயிற்று.

- மாநிலங்களின் கீழுள்ள சட்டமியற்றும் சபைகளில் 8 முதல் 20 வரை உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது.

- மத்திய அரசின் கீழுள்ள சட்டமியற்றும் சபையில் 6 பேர் அதிகாரிகளாகவும் 5 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாகவும் மீதி 5 பேரில் கல்கத்தா வணிகச் சங்கம் ஒருவரையும் சென்னை, பம்பாய், வங்காளம், வடமேற்கு மாகாணங்களின் சபைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு அலுவல்பூர்வமல்லாத உறுப்பினர்களையும் அனுப்பவேண்டும் என்று ஏற்பட்டது.

- மாநிலங்களில் குறிப்பாக சென்னை மாநிலத்தில் உள்ள உறுப் பினர்களில் 9 பேர் அதிகாரிகளாகவும், 4 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், மீதி 7 பேர் நகர சபைகள், மாவட்டக்கழகம், சென்னை மாநகராட்சிக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவைகள் தனித்தனியே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும்.

- இச்சட்டத்தின் மூலம் சட்டமியற்றும் சபைகளில் பணம் சம்மந்தமான மசோதா மீது கேள்விகள் கேட்கவும், விவாதிக்கவும் உரிமைகள் கொடுக்கப்பட்டன.

- ஆனால், கேள்விகள் கேட்பதற்கு 6 நாள்கள் முந்தியே அறிவிப்புக் கொடுக்கவேண்டும்.

- ஆனால், அக்கேள்வியை மறுக்கும் அதிகாரமும் எவ்விதக் காரணங்களும் காட்டாமல் தடைசெய்யும் அதிகாரமும் மாகாண ஆளுநர்களுக்கும் தலைமை ஆளுநருக்கும் உரிமைகள் கொடுக்கப்பட்டன.

**சட்டத்தின் முக்கியத்துவம்**

- இச்சட்டம் 1861-ம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தை விட முன்னேற்றமானது.

- இந்திய தேசியக் காங்கிரஸின் முன்னேற்றத்திற்கேற்ப இச் சட்டம் இயற்றப்பட்டதால் காங்கிரசிற்கு மறைமுகமான வெற்றிகள் கிடைத்தன என்றுகூடக் கூறலாம்.

- பண சம்மந்தமான மசோதாக்களை விவாதிக்கும் அதிகாரங்கள் சட்டமியற்றும் சபைக்குத் தரப்பட்டன.

- இந்தியாவில் உள்ள பல சங்கங்களின் பிரதிநிதிகள் அங்கத்தினர்களாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

- 1861-ஆம் ஆண்டுச் சட்டத்தில் உள்ளது போல மகாராஜாக்கள் தான் அங்கத்தினர்களாக முடியும் என்ற நிலை மாறியது.

- இருந்தபோதிலும் இச்சட்டத்தில் சட்டமியற்றும் சபைகளில் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் செல்வாக்கு ஓங்கியிருந்தது.

- அதனால், அரசு அவர்களின் துணைகொண்டு தனக்குச் சாதகமான சட்டங்களை இயற்றியது.

- அலுவல்பூர்வமற்ற அங்கத்தினர்களுக்குச் சட்டமியற்றும் சபைகளில் செல்வாக்கு அதிகம் இல்லை. அதனால் அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்களும் வெற்றியடையவில்லை.

# பாடம் 12
# மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள் 1909
## (Minto - Morley Reforms 1909)

1909-ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் என்பது இந்தியாவின் அரசாங்க நிர்வாகத்தில் இந்தியர்களைச் சேர்ப்பதற்கான ஒரு படியாக இங்கிலாந்து அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சட்டம் ஆகும். 1905 முதல் 1910 வரையிலான காலகட்டத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த மிண்டோ பிரபு மற்றும் இங்கிலாந்தில் இந்திய அரசு செயலாளராக இருந்த ஜான் மார்லி பிரபு ஆகிய இரு பிரிட்டிஷ் அதிகாரிகள் இச்சட்டத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியதால், இது அவர்களின் பெயரால் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**பின்னணி / காரணங்கள்**

- இந்திய வரலாற்றில் 20-ம் நூற்றாண்டு தேசிய இயக்கம் வேகமாக வளர்ச்சி அடையும் காலமாக மாறியது.

- இந்திய தேசிய காங்கிரஸ் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்டபோதிலும், 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் தேசிய இயக்கம் விரைவாக வளர்ச்சியடைய முற்பட்டது.

- முந்திய நூற்றாண்டில் அது தனது குறைகளை அரசிற்குத் தீர்மானங்களாகவும், மனுக்களாகவும் சமர்ப்பித்து வந்தது. ஆனால், இப்போது அதற்கு மாறாக ஆங்கில அரசிற்கெதிராகப் பல கிளர்ச்சிகளை நடத்தி இந்திய மக்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெற ஆரம்பித்தது.

- அதற்கேற்பக் கி.பி. 1905-ல் கர்சன் பிரபு இந்திய மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் வங்காளத்தை இரு மாகாணங்களாகப் பிரித்தார்.

- இச்செயலைத் தேசியவாதிகள் இந்தியர்களிடையே இந்து-முஸ்லிம் பாகுபாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் அதிகமுள்ள கிழக்கு வங்காளப் பகுதியைத் தனியாக ஆங்கில அரசு பிரிக்கிறது எனக்கூறி இவற்றிற்கெதிராகக் கிளர்ச்சிகளை நடத்தினர்.

- லோகமான்ய திலகர் போன்ற தீவிரவாதிகள் தேசிய இயக்கங்களை நடத்தினார்கள். இந்தியா முழுமையும் இக் கிளர்ச்சி பரவியது. 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்ற கோஷத்தை இந்திய மக்களிடையே திலகர் போன்றோர் கிளர்ந்தெளச் செய்தனர்.

- இவற்றைத் தடுக்க ஆங்கில அரசு இந்திய மக்கள் மீதும் தலைவர்கள் மீதும் பயங்கரமான அடக்கு முறைகளை ஏவிவிட்டது.

- இதனால், காங்கிரஸில் இருபிரிவுகள் தோன்றின. திலகர் போன்ற தீவிரவாதிகள் கிளர்ச்சிகள் மூலம் ஆங்கில அரசைப் பணிய வைக்கவேண்டும் என்றும், கோகலே போன்ற மிதவாதிகள் அமைதியான முறையில் ஆங்கில அரசை வற்புறுத்தி அரசியல் ரீதியாகச் சில சலுகைகளைப் பெறவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

- இதனால் காங்கிரஸ் சபையினின்று தீவிரவாதிகள் பிரிந்தனர். இப் பிரிவினையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆங்கில அரசு காங்கிரஸ் மகாசபையில் உள்ள மிதவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகக் கி.பி. 1909-ம் ஆண்டில் மின்டோ-மார்லி சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தது.

- இதற்கிடையில் முஸ்லிம்கள் இச்சமயத்தில் ஆங்கில அரசிற்குச் சாதகமாக இருந்தனர்.

- 1908-ஆம் ஆண்டில் மின்டோ பிரபுவிடம் தங்களுக்கெனத் தனியாகத் தொகுதிகள் ஒதுக்கப்படவேண்டும் என்றும் அத்தொகுதிகளில் முஸ்லிம்கள் தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் எனவும் முறையிட்டனர்.

- மின்டோ பிரபுவும் அவர்களைத் தேசியவாதிகளிடமிருந்து பிரிக்க வேண்டும் என்பதற்காக இச்சட்டத்தில் முஸ்லிம்களுக்காகத் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படவேண்டுமெனக் கூறினார்.

- ஆகவே, இச்சட்டம் இந்திய மக்களிடையே பிரித்தாளும் சூழ்ச்சியை உண்டுபண்ணுவதற்கே கொண்டுவரப்பட்டச் சட்டமாகும்.

**சட்டத்தின் கூறுகள்**

- இச்சட்டத்தின் மூலம் மத்திய மாகாணங்களின் சட்டமியற்றும் சபைகள் பெரிதாக்கப்பட்டன.

- இவை தவிர தலைமை ஆளுநரின் கீழுள்ள செயற்குழுவில் ஓர் இந்திய அங்கத்தினர் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

- அதன்படி இச்செயற்குழுவில் சத்தியேந்திர பிரசன்ன சின்ஹா என்பவர் முதன் முதலாக நியமிக்கப்பட்ட இந்திய அங்கத்தினராவார்.

- மத்திய அரசின் கீழுள்ள சட்டமியற்றும் சபைகளில் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்த்தப்பட்டது.

- அதில் 33 பேர் அதிகாரிகளாகவும், மீதி 27 பேர் அதிகாரிகளல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும். அதிகாரப்பற்றற்ற 27 பேர் நிலப்பிரபுக்கள், முஸ்லிம்கள் பம்பாய், வங்காளம் ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தகப் பேரவைகள் ஆகியவற்றின் பிரதி நிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- முஸ்லிம் மக்களுக்காகத் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டு அவற்றிலிருந்து முஸ்லிம் பிரதிநிதிகள் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் இச்சட்டம் கூறிற்று.

- பெரிய மாநிலங்களான சென்னை, பம்பாய், வங்காளம் ஆகியவைகளில் உள்ள சட்டப் பேரவையின் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப்பட்டது.

- அதன் அதிகாரப்பற்றற்ற அங்கத்தினர்களை ஸ்தல சுயஆட்சி, நிலப் பிரபுக்கள், பல்கலைக்கழகங்கள், வியாபாரிகள் சங்கங்கள் ஆகிய பல கழகங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பின.

- இச்சட்டமியற்றும் சபைகளின் உறுப்பினர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கவும் தீர்மானங்கள் கொண்டு வரவும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது.

- ஆனால், இந்தத் தீர்மானங்கள் அரசிற்கு ஆலோசனைக் கூறக் கூடிய முறையில்தான் இருக்கவேண்டும்.

- மேலும், இராணுவம், வெளிநாட்டுத் தொடர்பு போன்றவைகளைப் பற்றி விவாதிக்கவோ தீர்மானங்கள் கொண்டுவரவோ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

**சட்டம் பற்றிய மதிப்பீடு**

- இந்திய நிர்வாகத்தில் பல மாற்றங்களை இச்சட்டம் கொண்டு வந்தபோதிலும் காங்கிரஸ் தலைவர்களை இது திருப்திப்படுத்தவில்லை.

- காங்கிரஸ் தலைவர்கள் இச்சட்டம் இந்தியப் பிரதி நிதிகள் அடங்கிய அரசைக் கொண்டுவருமென எதிர்பார்த்தனர்.

- அதற்கு மாறாக மத்தியிலும், மாநிலத்திலும் உள்ள சட்டமியற்றும் சபைகளைத்தான் பெரிதாக்கியது.

- இந்திய மக்களிடையே இருந்த ஒற்றுமையை முஸ்லிம்களுக்கெனத் தனித் தொகுதி ஏற்படுத்தி இந்து முஸ்லிம் வேறுபாட்டை உண்டு பண்ணி, பின்

முஸ்லிம்கள் தனியாகப் பிரிந்து முஸ்லிம் லீக் கட்சியை ஏற்படுத்தி அதன் மூலம் பாகிஸ்தான் பிரிவதற்கு இச் சட்டம் வழி வகுத்தது எனலாம்.

- நேரடித் தேர்தல் முறையை இச்சட்டம் கொண்டுவந்தபோதிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருக்கும் படி செய்தது.

- அடுத்தபடியாகச் சட்டப் பேரவையின் அங்கத்தினர்கள் அரசின் கொள்கைகளைப்பற்றி உரையாடுவதற்குத்தான்' உரிமை வழங்கப்பட்டதே தவிர வைஸ்ராய் அல்லது ஆளுநரின் கீழுள்ள நிர்வாகக் குழுக்களின் நடவடிக்கைகளைக் குறைகூற அதிகாரமில்லை.

- இவ்வாறு பல குறைகள் இச்சட்டத்தில் இருந்தமையால்தான் இந்தியத் தலைவர்களும், தேசியவாதிகளும் இவற்றை வரவேற்கவில்லை.

- இக் குறைபாடுகளை விவாதிக்க வேண்டி, மேலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டுப் பல சட்டங்கள் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

# பாடம் 13
# மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் 1919
## (Montagu-Chelmsford Reforms 1919)

**மாண்டேகு - செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் என்றால் என்ன?**

1919-ல் ஆங்கிலேய இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த செம்ஸ்போர்டு பிரபு மற்றும் ஆங்கிலேய இந்திய அரசின் செயலளர் எட்வின் சாமுவேல் மாண்டேகுவும் இணைந்து, ஆங்கிலேய இந்திய மாகாண நிர்வாகங்களில் இந்தியர்களுக்கு சுயாட்சி வழங்க, 1919-ல் ஒரு அறிக்கையை தயாரித்து பிரித்தானியப் பேரரசுக்கு அனுப்பினர்.

இதனடிப்படையில் இந்திய அரசுச் சட்டம், 1919 நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி சென்னை மாகாணம், வங்காள மாகாணம், பம்பாய் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன், மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சட்டமன்றங்கள் நிறுவப்பட்டன.

**சட்டத்தின் பின்னணி / காரணம்**

- 1909-ம் ஆண்டு நிறைவேறிய இந்திய கவுன்சில் சட்டமானது யாருக்கும் மன நிறைவை அளிக்கவில்லை.
- அதன் பயனற்ற தன்மையைக் கண்டு அதனை குறை கூறினர். ஏமாற்றமும், அதிருப்தியும் கொண்ட மக்கள் தீவிர வன்முறை வழிகளில் இறங்கலாயினர். வெடிகுண்டு அரசியல் வேகமாகப் பரவியது.
- முஸ்லிம்களும் முணு முணுக்கத் தொடங்கினர். அவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பெற்றபோதிலும் மேலும் சலுகைகளை எதிர்பார்த்தனர்.
- வங்கப் பிரிவினையை ரத்து செய்த போது அவர்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்தனர். மேலும் இஸ்லாமிய நாடுகளை இங்கிலாந்தும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் நடத்திய முறையிலும் இந்திய முஸ்லிம்கள் அதிருப்தி கொண்டனர்.
- வெளிநாடுகளில் வாழ்ந்த இந்தியரின் நிலையும் ஆங்கில ஆட்சியாளர் மீது இந்நாட்டு மக்கள் சினம் கொள்ளச் செய்தது. முதல் உலகப் போரில் இங்கிலாந்துடன் ஒத்துழைத்த இந்தியர் அதற்குப் பிரதியாக அரசாங்கத்திடமிருந்து மேலும் சலுகைகள் வேண்டினர்.

- இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவிற்குப் புதிதாக வந்த அரசப் பிரதிநிதியான செம்ஸ்ஃபோர்டு பிரபு, பேரரசில் அடங்கிய தன்னாட்சி உரிமையை இந்தியாவிற்கு அளிப்பது தான் சிறந்தது என முடிவு செய்தார். அப்போது இந்தியாவிற்கான அமைச்சராக வந்த மாண்டேகுவும் இந்தியாவிடம் பரிவு கொண்டவர்.

- உலகப் போரில் நேச நாடுகளின் நிலை கவலைக்கிடமளித்த நேரத்தில் 1917-ம் ஆண்டு வரலாற்றுச் சிறப்படைய ஆகஸ்ட் அறிக்கையை வெளியிட்டார்.

- போர் முடிந்ததும் அவர் இந்தியாவிற்கு வந்து இந்தியத் தலைவர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் கருத்தை அறிந்தபின் மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு அறிக்கை எனும் பரிந்துரைகளை வழங்கினார்.

- அவற்றை அடிப்படையாக வைத்து 1919-ம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டத்தை ஆங்கிலப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. அதன் வழியாக வந்தவையே மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் ஆகும்.

**சட்டத்தின் நோக்கங்கள்**

- படிப்படியாக இந்தியருக்குச் சுதந்திரம் வழங்குவதும், இந்தியர் தன்னாட்சிக்குத் தகுதி உடையவர் என்று நிரூபிக்கும் வரை அதனை ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கத்தில் வைத்திருப்பதும் அச்சட்டத்தின் நோக்கமாகும்.

- இந்தியருக்குச் சுதந்திரம் வழங்குதல் இறுதிக் குறிக்கோளாயினும், இந்தியர்கள் பொறுப்புணர்ச்சி காட்டி ஆங்கில ஆட்சிக்குத் தங்களின் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென அது வற்புறுத்தியது.

- அதற்காக ஆட்சித்துறையின் ஒவ்வொரு கிளையிலும் இந்தியரை அமர்த்திப் பழக்குதலும், தன்னாட்சி முறையில் பயிற்சி தரும் துறைகளைச் சிறிது சிறிதாக வளரச் செய்வதுமே உரிய வழிகளாக அச்சட்டம் கையாண்டது.

**சட்டத்தின் கூறுகள்**

- அச்சட்டத்தின் முக்கிய கூறுகளில் முதல் இடம் பெறுவது தலைமை அரசாங்கம் (Home Government) பற்றியதாகும்.

- இங்கிலாந்திலுள்ள இந்தியாவிற்கான அமைச்சரும் இந்திய சபையும் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

- இந்திய சபையில் எட்டிருலிந்து பன்னிரண்டு வரையிலான உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலம் பதவி வகித்தனர். இச்சபையில் இந்தியரின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்றாக உயர்ந்தது.

- இந்தியாவில் ஆங்கில அரசிற்குப் பொறுப்பாய் இருக்க உயர் ஆணையாளர் (High Commissioner) நியமிக்கப்பட்டார்.

- இந்தியாவிற்கான அமைச்சரும் அவரது நேருதவிச் செயலர்களும் இந்திய நாட்டின் வருவாயிலிருந்து ஊதியம் பெறாமல் பிரிட்டன் நாட்டு வரி வருமானத்திலிருந்தே ஊதியம் பெற்று அந்நாட்டுப் பாராளுமன்றத்திற்கு பொறுப்புள்ளவர்களாயினர்.

- இந்திய அரசாங்கம் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

- மத்திய அரசைப் பொறுத்தவரையில் இச்சட்டம் அதிக மாறுதல் செய்யவில்லை. மத்திய அரசில் அரசப் பிரதிநிதியின் தலைமையில் நிர்வாகக் குழு ஒன்று இருந்தது. அதில் நான்கு ஐரோப்பியரும், மூன்று இந்தியரும் உறுப்பினர்கள். இக்குழு 'நிதி' ஒன்றில் தான் மத்திய சட்ட மன்றத்திற்குக் கட்டுப்பட்டது. இருப்பினும் அரசப்பிரதிநிதிக்குச் சில சிறப்பதிகாரங்கள் இருந்தன.

- மத்தியில் இரு சட்டமன்றங்கள் இருந்தன. அவை கீழ் சட்டசபை (Legislative Assembly), மேல் சபை (Legislative Council) கீழ் சபையில் மொத்தம் 145 உறுப்பினரில் 103 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், 42 பேர் நியமன மானவர்கள். பொதுத் தொகுதிகளிலிருந்து ஏறக்குறைய பாதிப்பேரும், மற்றவர் வகுப்புவாரி அல்லது தனிப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இச்சபையின் ஆயுட்காலம் மூன்றாண்டுகள் என்றாலும் அதனைக் கூட்டவும் குறைக்கவும் அரசப்பிரதிநிதிக்கு அதிகாரம் உண்டு.

- மேல் சட்டசபையில் ஏறக்குறைய பாதிப்பேர் நியமன உறுப்பினர்கள். மீதிப்பேர் தேர்தல் மூலம் வந்தவர்கள். அதனுடைய ஐந்தாண்டுக் காலத்தை அரசப் பிரதிநிதியால் நீட்டிக்க அல்லது குறைக்க முடியும். மத்திய சட்டமன்றங்களைக் கூட்டவும், கலைக்கவும் அவற்றின் ஆயுட் காலத்தை மாற்றவும். அரசப் பிரதிநிதிக்கு அதிகாரம் உண்டு.

- சட்டமன்றங்களில் வரவு செலவுத்திட்டம் உட்பட பல பொருள் பற்றி விவாதம் செய்யலாம். கேள்விகள் கேட்கலாம்; சில பொருள் பற்றி மசோதாக்கள் கொண்டு வரலாம். ஆனால் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, நாட்டுக்கடன், சமயம் போன்ற பல பொருள் பற்றித் தனியாக மசோதா கொண்டு வரும் அதிகாரம் அவைகளுக்கு இல்லை.

- பிரிட்டிஷ் இந்தியா முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ. ஒரு மசோதா இடர்ப்படுத்தும் என அரசப்பிரதிநிதி கருதினால் அதனை நிராகரிக்கலாம். பிரிட்டிஷ் இந்தியாவின் நன்மைக்கும், பாதுகாப்பிற்கும், அமைதிக்கும் ஒரு மசோதா தேவையென்று அவர் கருதினால் சட்டமன்றம் நிராகரித்த போதிலும் அதனை அவர் சட்டமாகச் செய்யலாம்.

- அரசாங்கத்திற்குத் தேவைப்படும் நிதியைச் சட்ட மன்றங்கள் அனுமதிக்க மறுத்தாலும், அதனைக் குறைத்தாலும் நிர்வாகத்தின் தலைவரான அரசப்பிரதிநிதி அவசியம் எனக் கருதினால் அது அளிக்கப்படும்.

- அவசர காலங்களில் உரிமைக் கட்டளைகள் மூலமாக ஆறு மாத காலத்திற்கு அவர் ஆட்சி செய்ய முடியும். சட்ட மன்றங்கள் நிறைவேற்றும் சட்டங்கள் அவரது ஒப்புதலையும் அரசரின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

- இங்ஙனம் மத்தியில் பொறுப்பாட்சி ஏதும் இச்சட்டத்தால் ஏற்படவில்லை. சட்டமன்றங்கள் ஓரளவு விரிவு செய்யப்பெற்றதோடு சில பொருள்கள் பற்றி விவாதிக்கவும், மசோதாக்கள் கொண்டு வரவும் அதிகாரம் வழங்கப்பட்டது.

**இரட்டையாட்சி**

- மாநில அமைப்பைப் பார்க்கும் போது அங்கே இரட்டை ஆட்சி புகுத்தப் பெற்றது.

- ஆளுநரும் அவரது நிர்வாகக் குழுவும் ஒரு புறமும், அவரால் நியமனம் பெற்ற அமைச்சர்களின் குழு ஒரு புறமும் தனித்தனியே சில துறைகளை நிர்வாகம் செய்தன.

- அமைச்சர் குழுவின் கீழிருந்த துறைகளை 'மாற்றப்பட்ட துறைகள்' (Transferred Departments) என்றும், ஆளுநரின் நேரடி நிர் வாகத்தில் இருந்த துறைகள் மாற்றப்படாத துறைகள்' (Reserved Departments) என்றும் வழங்கப் பெற்றன.

- இவ்வாறு ஒரே மாநிலத்தில் இரண்டுவித நிர்வாகக் குழுக்கள் ஆட்சி புரிந்ததால் இதனை இரட்டை ஆட்சி என்கிறோம்.

- ஆளுநரின் தலைமையில் இருந்த நிர்வாகக் குழுவில் அரசால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர் வரை இருந்தனர். அவர்கள் அரசப்பிரதிநிதிக்கும் தலைமை அரசாங்கத்திற்குமே பொறுப்புள்ளவர்கள்.

- முக்கிய துறைகளான காவல், சிறைகள், நிதி, நீதி, நீர்ப்பாசனம், நில வரி, காடுகள் போன்றவை ஆளுநரின் நேர்ப்பார்வையிலிருந்த மாற்றப்படாத

துறைகளாகும். அவற்றின் நிர்வாகத்தில் சட்டசபை ஆளுநரைக் கட்டுப்படுத்த முடியாது.

- இந்த ஆளுநர் நிர்வாகக் குழுவிற்கு மாறாக சட்டசபை உறுப்பினர் சிலரை அமைச்சர்களாக நியமித்து அவர்களிடம் உள்ளாட்சி, கல்வி, பொது நலத்துறை, பொதுப் பணித்துறை, மருத்துவம், வேளாண்மை போன்ற துறைகள் ஒப்படைக்கப் பெற்றன. அமைச்சர்கள் பொதுவாக சட்டசபைக்குக் கட்டுப்பட்டவர்கள்.

- ஆளுநர் பல பொது அதிகாரங்களையும் சில சிறப்பதிகாரங்களையும் கொண்டிருந்தார்.

- சில சட்டசபை உறுப்பினர்களை நியமித்தல், சட்ட சபையில் நிறைவேறிய மசோதாக் களை ஏற்றுக் கொள்ளுதல், திருத்துதல் அல்லது நிராகரித்தல், மாற்றப்படாத துறைகளில் மசோதா இயற்ற சட்டசபை மறுத்தால் அதனை அவசியம் என்று கருதினால் சட்டமாக இயற்றுதல் போன்ற அதிகாரங்கள் அவரிடமிருந்தன. மாற்றப்பட்ட துறைகளில் அதிகாரம் செலுத்த ஆளுநருக்கு உரிமை உண்டு என்ற போதிலும் அவர் பொதுவாக அமைச்சர்களின் ஆலோசனைப்படி நடக்க வேண்டியிருந்தது.

- மாநில சட்டசபைகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சபை அமைந்தது. அதற்கு ஓரளவு தாராள வாக்குரிமை அடிப்படையில் ஏறக்குறைய 70 சதவீத உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதமுள்ளவர்கள் நியமன உறுப்பினர்கள். அவற்றின் ஆயுட்காலம் மூன்றாண்டுகள் என்ற போதிலும் ஆளுநரின் விருப்பப்படி அது கூடலாம் அல்லது குறையலாம்.

- எல்லாப் பொருள்கள் பற்றியும் விவாதிக்கவும் மசோதாக்கள் கொண்டு வரவும் மாநில சட்ட சபைக்கு உரிமை உண்டு. ஆனால் அவை ஆளுநரின் ஒப்புதலையும் சில சமயங்களில் அரசப் பிரதிநிதியின் ஒப்புதலையும் பெற வேண்டும். மறுப்பானை (Veto Power) செலுத்தும் அதிகாரமும் அவருக்குண்டு.

- குறிப்பாக மாற்றப்படாத துறைகளில் ஆளுநர் குழு கொண்டு வரும் மசோதாக்களைச் சட்டசபை மறுக்க முடியாது.

### சட்டம் பற்றிய மதிப்பீடு

- இந்த அரசாங்கச் சட்டத்தில் சில நல்ல கூறுகள் இருந்த போதிலும் குறைகளே மலிந்திருந்தன.

- மத்திய அரசாங்கத்தில் சட்டமன்றங்கள் ஓரளவு விரிவு செய்யப்பெற்றன.

- உறுப்பினர்களுக்கு மேலும் சில அதிகாரங்கள் வழங்கப் பெற்றன.

- மக்களின் குறைகளை வெளியில் கொண்டு வரவும், உருப்படியான சில மசோதாக்களை நிறைவேற்றவும் மத்திய சட்டமன்றங்கள் பயன்பட்டன.

- மாநிலங்களில் இரட்டை ஆட்சி ஏற்பட்டதால் மக்களுக்கும் மக்களின் தலைவர்களுக்கும் அரசியலில் நல்ல பயிற்சி ஏற்பட்டது.

- தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள் சட்டமன்றச் செய்திகளிலும், ஆட்சி முறையிலும், நிர்வாகத்திலும் அனுபவம் பெற முடிந்தது.

- சில மாநிலங்களில் மக்கள் நலனைப் பேணும் சட்டங்கள் சில வெளிவந்தன.

- தன்னாட்சிப் பாதையில் இது ஒரு மைல் கல்போல் அமைந்தது.

- இது கொண்டு வந்த சீர்திருத்தங்கள் இல்லாதிருந்தால், அரசியல் வளர்ச்சி தாறுமாறாகச் சென்றிருக்கக்கூடும். புரட்சி எனும் பயங்கரப் பாதையில் சென்றிருக்கக்கூடும். மேற்கொண்டு வளர்ச்சியேற்படுவதற்கு இச்சட்டம் ஒரு தூண்டுதலாக அமைந்தது.

- திடமான தலைவர்களும், அவர்களை ஆதரிக்கும் பலமான சட்டசபைக் கட்சியும் இருந்த மாநிலங்களில் ஓரளவு நன்மை அளிக்கும் சட்டங்கள் நிறைவேறின.

- சுருக்கமாகச் சொல்வதானால் அரசியல் வளர்ச்சிக்கு இச்சட்டம் அநுசரணையாக இருந்தது.

- இது துவக்கி வைத்த அரசியல் அமைப்பு எனும் கடிகாரம் அதன் பிறகு நிற்காமல் ஓடியது.

- இருப்பினும் இச்சட்டத்தில் குறைகளே மிகுந்திருந்தன.

- தலைமை அரசாங்கத்தின் பிடிதளரவில்லை. மத்தியில் யதேச்சாதிகாரம் சிறிதும் குறையவில்லை.

- அரசப் பிரதிநிதியின் அதிகாரம் மத்திய சட்டமன்றங்களில் தலைதூக்கி நின்றது.

- சட்டமன்றங்கள் மறுக்கும் மசோதாக்களையும் அவர் தமது கையொப்பமிட்டுச் சட்டமாக்கும் தனியதிகாரம் அவரிடம் இருந்தது.

- மாநிலங்களில் கொண்டுவரப்பட்ட இரட்டையாட்சியில் பல சிக்கல்களும் சீர்கேடுகளும் எஞ்சின.

- இரட்டை ஆட்சியென்பது கொள்கையளவிலேயே குறையுடையது.

- நிர்வாகத்தை இரண்டாகப் பிரித்து அவை தனித்தனியே இயங்கச் செய்வது இயலாத ஒன்றாம்.

- பல துறைகள் ஒன்றோடொன்று பிணைந்தவை. அவற்பை அறுதியிட்டுப் பிரிப்பது முடியாத காரியம். அப்படியே பிரித்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற நிலையில் அவை செயலற்று நிற்கும்.

- வேளாண்மைத்துறை மாற்றப்பட்ட துறையில் அமைச்சரின் பொறுப்பில் இருந்தது. ஆனால் நிலவரி, நீர்ப்பாசனம், வேளாண்மைக் கடன் போன்றவை மாற்றப்படாத துறைகளாக ஆளுநரின் நேர்ப்பொறுப்பில் இருந்தன. நீர்ப்பாசனம், வேளாண்மைக் கடன் போன்றவை மீது அதிகாரமில்லாத வேளாண்மைத் துறை அமைச்சர் திறம்படச் செயலாற்ற முடியாது.

- நிதி ஆளுநர் கையில் இருந்ததால் மாற்றப்பட்ட துறைகளுக்குப் போதுமான பணம் ஒதுக்காமல் அமைச்சர்கள் இடர்ப்படநேர்ந்தது.

- அமைச்சர்கள் சட்டசபைக்குப் பொறுப்பானவராகையால் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற அவர்கள் எப்போதும் முயலவேண்டும்.

- ஆனால் அவர்களையும் மக்களையும் மனநிறைவு கொள்ளச் செய்வதற்கு அவர்கள் ஆளுநரை நம்பியிருக்க வேண்டி வந்தது.

- அவர்களது திட்டத்தை ஆளுநர் நிராகரிப்பாரரனால் அமைச்சர்களின் நிலை இருதலைக்கொள்ளி எறும்பு போலாகிவிடும்.

- மேலும் அமைச்சர்களை ஆளுநரே நியமிப்பார். ஆளுநரின் ஆதரவு இன்றி அமைச்சர்கள் செயல்பட முடியாத நிலை இருந்தது.

- தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினரில் பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைக்காவிடத்தும் நியமன உறுப்பினர்களின் ஆதரவை ஆளுநர் மூலமாகப் பெற்று ஒருவர் அமைச்சர் பதவியில் தொடர்ந்து இருக்க முடியும்.

- எனவே பல சமயங்களில் அமைச்சர்கள் சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இருப்பதைக் காட்டிலும் ஆளுநரிடமே அதிகப் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொண்டனர்.

- அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பு எனும் கொள்கை நடைமுறைக்கு வரவில்லை.

- ஆளுநர் அமைச்சர்களைத் தனித்தனியாகக் கலந்து ஆலோசித்தார்.

- எனவே உண்மையான பொறுப்பாட்சி, உருப்படியான தன்னாட்சி மாநிலங்கள் ஏற்படவில்லை.

- ஆயினும் 1919-ம் ஆண்டு அரசாங்கச் சட்டம் பல வழிகளில் அரசியல் வளர்ச்சிக்கு உதவியது.

- ஆட்சித்துறை, நிர்வாகம், சட்டமன்ற நடவடிக்கை கள் ஆகியவற்றில் இந்தியர் ஓரளவு முயற்சி பெற உதவியது.

- அதைவிட அச்சட்டம் நிறை வேறியதற்கு முன்னும் நிறைவேறிய பின்பும் அதனால் எழுந்த வாதப் பிரதிவாதங்களும் கண்டனக் குரல்களும், எதிர்ப்புகளும் அரசியல் விழிப்புணர்ச்சியைத் தூண்டித் தேசிய இயக்கம் வளர வாய்ப்பளித்தன.

# பாடம் 14
# சைமன் குழு
## (Simon Commission)

**சைமன் குழு என்றால் என்ன?**

சைமன் குழு என்பது ஆங்கிலேய இந்தியாவில் 1919-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலமான அரசியல் சீர்திருத்தங்கள் நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்று கண்டறியவும், அடுத்த கட்ட சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளை வழங்கவும் இங்கிலாந்து ஆட்சியாளர்களால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு குழுவாகும்.

**சைமன் குழு அமைக்கப்பட்டதன் பின்னணி / காரணம்**

- 1919ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம் (மான்டேகு செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்கள்) இந்தியர்களுக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரத்தை வழங்கியது.

- இதன் மூலம் மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை அமலுக்கு வந்து, சட்டமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

- ஆயினும், இந்திய தேசிய காங்கிரஸ் இதை ஏற்கவில்லை; தேர்தலில் போட்டியிடவும் இந்தியாவின் நிருவாகத்தில் பங்கேற்கவும் மறுத்துவிட்டது.

- அதனால், நீதிக்கட்சி போன்ற கட்சிகள் தேர்தல்களில் பங்கேற்று ஆட்சி செய்தன.

- இந்திய அரசுச் சட்டத்தில் இரட்டை ஆட்சி முறை நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அதன் நிறைகுறைகளை ஆராய ஒரு குழுவொன்றை அமைக்க வழிவகை செய்திருந்தது.

- அதன்படி 1928-ம் ஆண்டு இங்கிலாந்து அரசாங்கம் ஏழு இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பாராளுமன்றக் குழு ஒன்றை அமைத்தது.

- இதன் தலைவர் சர் ஜான் சைமனின் பெயரால் இது சைமன் கமிசன் என்று வழங்கப்பட்டது.

**சைமன் குழு உறுப்பினர்கள்**

- சர் ஜான் சைமன்
- கிளமண்ட் அட்லி
- ஹென்ரி-லெவி லாசன்
- எட்வர்ட் காடோகன்
- வெர்னான் ஹார்ட்ஷோம்
- ஜார்ஜ் லேன்-ஃபாக்சு
- டோனால்ட் ஹோவார்ட்

**சைமன் குழுவின் பணிகள்**

இந்தியாவுக்கு வந்து ஆட்சியாளர்கள், ஆளும் கட்சிகள், எதிர்க்கட்சிகள் என பல தரப்பினருடன் கலந்தாலோசித்து அவர்களது கருத்துகளை கேட்டறிவதும், அடுத்த எந்த மாதிரியான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தலாம் என்பது குறிந்து பரிந்துரை செய்வதும் சைமன் குழுவுக்குத் தரப்பட்டிருந்த பணிகள்.

**சைமன் குழுவிற்கு எதிர்ப்பு**

- 18 பிப்ரவரி, 1929ல் சைமன் குழு முதல் முறையாக இந்தியா வந்திறங்கியது.

- ஆனால், இந்தியர்களின் அரசியல் எதிர்காலத்தை முடிவு செய்ய நியமிக்கப்பட்ட அக்குழுவில் இந்தியர் ஒருவர் கூட இடம் பெறாததால் பெரும்பாலான இந்தியர்கள் அதிருப்தி கொண்டனர்.

- இந்திய தேசிய காங்கிரஸ், சுயாட்சி கட்சி, முஸ்லிம் லீக் போன்ற கட்சிகள் சைமன் குழுவினை புறக்கணிக்க முடிவு செய்தன.

- சைமன் குழு இந்தியாவுக்கு வந்த போது அதனை எதிர்த்து போராட்டங்கள் நடத்தினர்.

- “சைமன் திரும்பிப் போ” (Simon Go Back) என்ற கோசமிட்டபடி சைமன் குழு சென்ற இடங்களில் ஆயிரக்கணக்கானோர் கருப்புக் கொடி போராட்டங்கள் நடத்தினர்.

- நீதிக்கட்சி போன்ற சில கட்சிகள் சைமன் கமிசனுக்கு ஒத்துழைப்பு அளித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்தன.

- அக்டோபர் 1929-ல் மீண்டும் சைமன் கமிசன் இந்தியா வந்த போது போராட்டங்கள் தீவிரமடைந்தன.

- அத்தகைய ஒரு போராட்டத்தில் காவல்துறையினர் நடத்திய தடியடியில் காயமடைந்த லாலா லஜபத் ராய் மரணமடைந்தார்.

**நேரு அறிக்கை**

- சைமன் குழுவின் அறிக்கைக்குப் போட்டியாக மோதிலால் நேரு நேரு அறிக்கை என்ற அறிக்கையை வெளியிட்டார்.

- அதில் இந்தியாவுக்கு மேலாட்சி நிலை வழங்கும்படி கோரப்பட்டிருந்தது.

**சைமன் குழுவின் பரிந்துரைகள்**

- இங்கிலாந்து திரும்பிய சைமன் குழு 1930ல் தனது அறிக்கையை சமர்பித்தது.

- அதில் இரட்டை ஆட்சி முறையை ஒழித்து, இந்தியர்களுக்கு முழு பிரதிநிதித்துவம் வழங்கப் பரிந்துரை செய்தது.

- மேலும் இந்துக்களுக்கும் முசுலிம்களுக்கும் தனித் தனி வாக்காளர் தொகுதிகளைத் தொடரவும் பரிந்துரை செய்தது.

- இப்பரிந்துரைகளின் அடிப்படையிலும் வட்ட மேசை மாநாட்டு பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலும் இந்திய அரசுச் சட்டம், 1935 இயற்றப்பட்டு 1937ல் இந்தியாவுக்கு மாநில சுயாட்சி வழங்கப்பட்டது.

- முதல் மாகாணத் தேர்தல்கள் 1937 இல் நடத்தப்பட்டன, கிட்டத்தட்ட எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன.

சைமன் குழுவின் வருகை இந்திய சுதந்திர இயக்கத்திற்கு தலைவர்களையும் மக்களையும் மேலும் ஊக்குவிப்பதற்கான ஒரு உத்வேகத்தை அளித்தது என்றே கூறலாம்.

# பாடம் 15
# வட்ட மேஜை மாநாடுகள்
## (Round Table Conferences)

**வட்டமேசை மாநாடுகள் என்றால் என்ன?**

இந்திய வட்டமேசை மாநாடுகள் (Round Table Conferences) என்பன 1930-32 காலகட்டத்தில் ஆங்கிலேய இந்தியாவில் அரசியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்த ஆங்கிலேய அரசினால் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் ஆகும். மூன்று சுற்றுகளாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்திய அரசுச் சட்டம், 1935 இயற்றப்பட்டது.

**வட்டமேசை மாநாடுகள் கூட்டப்பட்டதன் பின்னணி / காரணம்**

- 1927-ல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பரிபூரண சுதந்திரம் அடைவதைக் காங்கிரஸ் தனது குறிக்கோளாகக் கொண்டது.
- எனினும், 1929-ம் ஆண்டு டிசம்பருக்குள் டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டால், அதை ஏற்றுக்கொள்வதென்றும், தவறினால், பரிபூரண சுதந்திரம் பெற வரிகொடா இயக்கம் தொடங்குவதெனவும் காங்கிரஸ் தீர்மானித்தது.
- இதற்கிடையில் இங்கிலாந்தில் 1929-ல் தொழிற்கட்சி தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்தது.
- இந்தியர்களின் விருப்பத்திற்கு ஆதரவு காட்டி வந்த அக்கட்சியின் தலைவர் ஒரு வட்டமேஜை மாநாட்டைக் கூட்டி, அதில் கலந்துகொள்வதற்குக் காந்தியடிகளை இங்கிலாத்துக்கு அழைத்தார்,
- ஆனால், இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிப்பதாக உறுதி கூறப்படாமை யால், காந்தியடிகள் அம்மாநாட்டிற்கு வரமறுத்து விட்டார், தொடர்ந்து சட்டமறுப்பு இயக்கத்தையும் தொடங்கினார்.
- உப்புச் சத்தியாக்கிரகம் செய்யத் தீர்மானித்து, 1913 மார்ச் 12-ல் காந்தியபடிகள் சில தொண்டர்களுடன் தண்டியாத்திரை புறப்பட்டார். வழி நெடுகிலும் இலட்சக்கணக்கான மக்கள் அவரை வரவேற்றார்கள். ஏப்ரல் 6-ல் தண்டியை அடைந்து, கடற்கரையில் உப்பெடுத்தார்.

- அதே நாளில், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் உப்புச் சத்தியாக்கிரகம் நடந்தது. அரசாங்கம் வழக்கம்போல் அடக்கு முறையைக் கையாண்டது. ஜவஹர்லால் நேரு உட்படப் பல தலைவர்கள் சிறைப்பட்டார்கள். பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்; காந்தியடிகளும் கைதானார். நாட்டில் கொந்தளிப்பு அதிகரித்தது.

- இங்கிலாந்தில் செய்யப்பட்ட பொருள்கள் எரிக்கப்பட்டன; வேலை நிறுத்தங்கள் நடந்தன. பல அவசரச்சட்டங்கள் பிறந்தன; இலட்சக்கணக்கானோர் சிறை புகுந்தார்கள், பல அரசாங்க அதிகாரிகள் தம் வேலைகளை உதறினார்கள்.

- இதற்கிடையே, 1929-ல் வெளியான சைமன் குழுவின் அறிக்கை பல தரப்பட்ட இந்தியர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அடுத்த கட்ட அரசியல் சீர்திருத்தங்களைத் தீர்மானிக்க வேண்டுமெனப் பரிந்துரைத்திருந்தது.

- மேலும் 1930 சட்ட மறுப்பு இயக்கத்தால் இந்தியாவில் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது.

- இங்கிலாந்து நாட்டுத் தலைவர்கள் பலரும் இந்தியாவுக்கு மேலாட்சி அங்கீகாரம் வழங்கும் காலம் வந்துவிட்டதாகக் கருதினர்.

- எனவே சைமன் குழுவின் பரிந்துரையின்படி அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்க வட்டமேசை மாநாடுகள் கூட்டப்பட்டன.

**முதலாவது வட்டமேசை மாநாடு (நவம்பர் 1930 - ஜனவரி 1931)**

- நவம்பர் 12, 1930 அன்று ஆறாம் ஜார்ஜ் மன்னர் முதலாவது வட்ட மேசை மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

- இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தபடியாலும், அதன் பெரும்பான்மையான தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்ததாலும் இம்மாநாட்டைப் புறக்கணித்து விட்டது.

- இங்கிலாந்தின் பிரதமர் ராம்சே மெக்டோனால்டு தலைமை வகித்த இம்மாநாட்டில் மூன்று ஆங்கிலேய அரசியல் கட்சிகளின் சார்பில் 16 பிரதிநிதிகளும் ஆங்கிலேய இந்தியா மற்றும் அதன் சமஸ்தானங்களின் பிரதிநிதிகளாக 57 பேராளர்களாக இந்துமகாசபையினர், இந்தியக் கிருத்தவர்கள், முசுலிம் தலைவர்கள், சீக்கியர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

- இவர்களோடு தாழ்த்தப்பட்டவர்களின் சார்பாக டாக்டர் அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- ஒரு அனைத்திந்திய கூட்டாட்சி ஆட்சி முறையை உருவாக்குவது குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

- இதற்கு கலந்து கொண்ட அனைத்து தரப்பினரும் ஒப்புதல் அளித்தனர்.

- ஆட்சிப் பொறுப்பை அதிகார அமைப்பிலிருந்து சட்டமன்றங்களுக்கு மாற்றுவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

**இரண்டாவது வட்டமேசை மாநாடு (செப்டம்பர் - டிசம்பர், 1931)**

- காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானதால், இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது.

- மகாத்மா காந்தி, சரோஜினி நாயுடு உள்ளிட்டோர் காங்கிரஸ் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

- செப்டம்பர் 7, 1931-ல் மாநாடு தொடங்கியது.

- அம்பேத்கர் ஏற்கனவே முசுலிம்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு கொடுக்கப்பட்டது போன்று தலித் மக்களுக்காக தனித் தொகுதிகளும், தனி வாக்குரிமையும் வேண்டுமெனக் கோரினார். அதே போன்று பிற சிறுபான்மையினருக்கும் தனித் தொகுதிகள் வேண்டாமென்று வற்புறுத்தினார்.

- இதனை பிற இந்திய கட்சிகளும் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொள்ள வில்லை. இதனால் பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்தன.

- மேலும் இங்கிலாந்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு தொழிலாளர் கட்சி அரசு கவிழ்ந்து அனைத்து கட்சி தேசிய அரசு உருவானது.

- இந்த அரசியல் குழப்பங்கள், பெரும் பொருளியல் வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதாரக் குழப்பங்களால் ஆங்கிலேயரால் இந்திய விவகாரங்களில் அதிக கவனம் செலுத்த இயலவில்லை.

**மூன்றாவது வட்டமேசை மாநாடு (நவம்பர் - டிசம்பர், 1932)**

- இறுதி வட்ட மேசை மாநாடு நவம்பர் 17, 1932ல் தொடங்கியது.
- காங்கிரசும் இங்கிலாந்தின் தொழிலாளர் கட்சியும் இதில் பங்கு கொள்ள மறுத்து விட்டன.
- பிற தரப்புகளிலிருந்து 46 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் இறுதியாக எந்த முடிவும் எடுக்கபப்டவில்லை. ஆனால் இங்கிலாந்து அரசு தன்னிச்சையாகச் செயல்பட்டு இந்திய அரசுச் சட்டத்தைம் 1935-ல் இயற்றியது.

# பாடம் 16

# 1935-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம்

## (Government of India Act 1935)

**1935-ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் என்றால் என்ன?**

1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் என்பது ஆங்கிலேய இந்தியாவில் அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்காக இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஒரு சட்டம் ஆகும். இதன் மூலம் இந்தியாவில் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு இந்தியர்களுக்கு மேலதிக தன்னாட்சி உரிமைகள் வழங்கப்பட்டன.

**சட்டம் கொண்டுவரப்பட்டதற்கான காரணம் / பின்னணி**

- 1919-ம் ஆண்டுச் சட்டத்தால் மனநிறைவு பெறாத இந்தியத் தேசியவாதிகள் பெரும் அரசியல் போராட்டத்தில் இறங்கினர். இப்போராட்டத்தை முறிக்க விரும்பிய பிரிட்டிஷ் அரசாங்கம், 1919-ம் ஆண்டுச் சட்டத்தின் செயல்முறை பற்றியும், பொறுப்புடைய அரசாங்கம் நிறுவுவது பற்றியும் ஆராய்ந்து கருத்துகளை வெளியிடுமாறு ஒரு கமிஷனை அமர்த்தியது.

- அக்கமிஷனின் தலைவராக சர் ஜான் சைமன் என்பவர் நியமனம் பெற்றார். இக்கமிஷனில் இந்தியர்கள் இடம் பெறவில்லை. எனவே, அரசியல் கட்சிகள் இக்கமிஷனை பகிஷ்கரித்தன. இக்கமிஷனின் அறிக்கை வெளியானதும் அதைத் தேசியவாதிகள் பிற்போக்கானதென எதிர்த்தனர்.

- கூட்டாட்சி முறையை வலியுறுத்தாமல் பலம் பொருந்திய, பொறுப்பில்லா ஒரு மத்திய அரசாங்கம் அமைக்குமாறு கமிஷன் வற்புறுத்தியது.

- பிரிட்டிஷாரின் கருத்துக்களையும் அமைப்பு முறையையும் விரும்பா இந்தியர்கள் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து இந்திய அரசியலமைப்பை வரையுமாறு பணித்தனர்.

- அக்கமிட்டிக்கு மோதிலால் நேரு தலைமை தாங்கியதால் அதற்கு நேரு கமிட்டியெனப் பெயராயிற்று. இக்கமிட்டி மிக அருமையானதோர் அறிக்கையை வெளியிட்டது. அதில் கூட்டாட்சி முறை வலியுறுத்தப்பட்டதுடன் அதற்கு பிரிட்டன் முழு அதிகாரத்தையும் மாற்றம் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்தியத் தேசியவாதிகளின் மனத்திடத்தையும் போக்கையும் பழைய அரசியல் சட்டத்தால் மாற்றமுடியாதென்பதை உணர்ந்து பிரிட்டன் புதியதோர் அரசியலமைப்பை உருவாக்க முனைந்தது.

- அனைத்திந்தியக் கூட்டாட்சியில் இந்திய அரசர்களும், சமயவாதிகளும், பிற்போக்குச் சக்திகளும் புகலிடம் பெறலாம் என்ற நம்பிக்கையில் பிரிட்டன் இம்முறையை ஏற்றது.

- அப்பொழுது, வைசிராயாக இருந்த இர்வின் பிரபுவும், பிரிட்டனின் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டி அரசியலமைப்பைப் படைக்க வருமாறு இந்திய அரசியல் கட்சிகளுக்கு அழைப்புத் தந்தார்.

- பிரிட்டனின் மேலாதிக்க அதிகாரத்தால் அவதியுற்ற இந்திய அரசர்கள் விடுதலை பெறக் காலம்கருதி இருந்தனர். கூட்டாட்சி அமைப்பில் தங்களையும் தொடர்புபடுத்திக்கொள்ள விரும்பிய இந்திய அரசர்கள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் ஒத்துழைத்துக் கூட்டாட்சியை அமைக்க விழைவதாகக் கூறினர்.

- இந்தியத் தேசிய காங்கிரசும் அனைத்திந்தியக் கூட்டாட்சியை வரவேற்று, இந்தியர்களுக்கு அதிகாரம் முழுமையாக மாற்றப்படவேண்டுமென்று வற்புறுத்தியது.

- ஒரு சிலர் கூட்டாட்சி அமைப்பு இந்தியாவுக்கு ஒவ்வாதென வாதித்தனர். அச்சூழ்நிலையில், முதல் வட்டமேசை மாநாடு கூடப் போவதாக பிரிட்டன் அறிவித்தது. அதில் பங்கு பெற இருந்தோர் நாட்டின் நலன் கருதித்தம்மாலானதைச் செய்யலாமென நினைத்தனர்.

- அதே சமயத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது கன்சர்வேட்டிவ் கட்சியினரும், லிபரல் கட்சியினரும், இந்தியாவின் டொமினியன் அந்தஸ்துக் கோரிக்கையை வன்மையாக எதிர்த்தனர். அதனுடன் வைசிராயின் அறிக்கையில் காணப்பட்ட தாராளப்போக்கையும் கண்டித்தனர்.

- எனவே, பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கையிழந்த காங்கிரஸ், 1930-ல் நடந்த கராச்சி மாநாட்டில் முழுச் சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றி வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்தது. இருப்பினும், மற்ற அரசியல் கட்சிகளும், லிபரல் கட்சியினரும், அரசர்களும் மாநாட்டில் பங்கு பெற்றனர்.

- இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்து கொண்டிருக்கும் போது இம் மாநாடு லண்டனில் கூடிற்று. பிக்கனிர் அரசர் மாநாட்டின் முதற்கூட்டத்தில் இந்திய அரசர்கள் கூட்டாட்சியில், சேர்ந்து கொள்ள விரும்புவதாக

அறிவித்தார். அதைத் தொடர்ந்து பாட்டியாலாவின் அரசர் மற்றவர்களின் சார்பாகக் கூட்டாட்சி முறையை வரவேற்பதாக அறிவித்தார்.

- பிரிட்டிஷாரின் சார்பாகப் பிரதம அமைச்சர் மாக்டொனால்டும் (MacDonald) இந்தியக் கூட்டாட்சியே தமது குறிக்கோள் எனவும், சட்டசபைக்குப் பொறுப்புடையதாகக் கூட்டாட்சி நிர்வாகக்குழு இருக்கவேண்டுமென்பதற்கு இசைந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். இவ்வறிக்கையில் இருந்த கருத்துகளை பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது.

- ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் தான் சொல்லியவற்றைச் செயல்படுத்த உடனடியாகச் சட்டமியற்றாமல் காலந்தாழ்த்தி இந்தியர்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டது.

- இச்சூழ்நிலையில், இந்திய அரசியல் வாழ்க்கையில் நல்லுறவு காணவும், மனக் கசப்பைப் போக்கவும். வைசிராய் இர்வின் சிறையில் இருந்த காங்கிரசுத் தலைவர்களை விடுதலை செய்தார்.

- விடுதலையான மகாத்மா காந்தியும் சட்டமறுப்பியக்கத்தை நிறுத்தி வைசிராயுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இறுதியில் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வதாக அறிவித்தார்.

- இதற்கிடையில் இந்திய மன்னர்கள் தங்களது கருத்தை மாற்றி ஓர் இணைப்பு நாட்டையே (Confederation) தாம் விரும்புவதாகக் கூறினர். இருப்பினும், இந்திய மன்னர்களில் பலர் பழைய வாக்குறுதியைத் தொடர்ந்து வலியுறுத்தினர். அப்பொழுது இங்கிலாந்தில் பதவியிலிருந்த கலப்பு அமைச்சரவையில் பெருமளவு கன்சர்வேட்டிவ் கட்சியினர் இருந்தமையால் இந்தியச் சுதந்திரம் பற்றிய பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணவில்லை.

- இரண்டாவது வட்ட மேஜை மாநாடு கூடியவுடன், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக சர் சாமுவேல் ஹோர் (Sir Samuel Hoare) என்பவர் நிகழ்த்திய உரையில், 'இம் மாநாடு ஓர் அரசியல் நிர்ணய சபையாகாது' எனக் கூறினார். மாநாடு தோல்வியில் முடிவடைந்த்தது.

- இந்தியச் சிக்கல்கள் பற்றி ஆய்ந்து கருத்துகளைத் தெரிவிக்க அமைத்த ஆலோசனைக் குழு எந்தவிதமான உடன்பாட்டையும் காணவில்லை. எனவே, பிரிட்டிஷார் ஒரு புதிய அரசியலமைப்பைப் புகுத்த நினைத்து மூன்றாவது வட்டமேசை மாநாட்டைக் கூட்டினர்.

- இம் மாநாட்டில் இந்திய தேசியக் காங்கிரசும், பிரிட்டனின் தொழில் கட்சியும் பங்கு பெறவில்லை. மாநாடு கூடிக் கருத்துகளை ஆயும்முன்னரே,

சமயம், வகுப்பு (சாதி) அடிப் படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு திட்டத்தை ராம்சே மாக்டொனால்டு அறிவித்தார். இத்திட்டத்தை எதிர்த்து மகாத்மா காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார். சமரசப் பேச்சுகளின் பயனாகப் பூனா உடன்பாடு ஏற்படவே, காந்தி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

- மூன்றாவது மாநாட்டின் இறுதியில் இந்தியாவிற்கான ராஜாங்கச் செயலாளர் மூன்று கருத்துகளை வெளியிட்டார்.
  - இந்தியக் கூட்டாட்சியில், இந்திய அரசுகளில் (சமஸ்தானங்கள்) நூற்றுக்கு ஐம்பதாவது சேரவேண்டும். மக்கள் தொகையால் கணக்கிட்டாலும், பாதிக்கு மேல் இருக்கவேண்டும்.
  - இந்திய முஸ்லீம்களுக்கு மத்திய சட்டசபையில் 331% இடங்கள் ஒதுக்கித் தரவேண்டும்.
  - சிந்து, ஒரிசா மாகாணங்கள் தனித்த புதிய மாகாணங்களாக அமையவேண்டும்.

அம்மாநாட்டில் தொடர்ந்து நடந்த விவாதங்களில் பல்வேறு கருத்துகளும் திட்டங்களும் ஆராயப்பட்டனவெனினும், உயிர்க் கருத்தாகிய இந்திய சுதந்திரம் மறைவிடமெய்தியது. அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்ட ஒரு முடிவான அறிக்கையை 1933-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்டது. அதில் இந்தியக் கூட்டாட்சி பற்றியும், மாகாணத் தன்னாட்சி பற்றியும், மத்திய, மாகாண நிர்வாகத் துறைகளின் சிறப்புப் பொறுப்புகள் பற்றியும் விரிவானதொரு கருத்து விளக்கம் இருந்தது. இக்கருத்துகளையொட்டி எழுந்த ஐயப்பாடுகளுக்கு விளக்கம் காணவும் மாற்றுக் கருத்துகளைப் பெறவும் விரும்பிய அரசாங்கம் அதை ஒரு கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு (Joint Select Committee) விட்டது. இக்குழுவின் ஆய்வறிக்கையைப் பாராளுமன்றம் ஏற்று 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமாக இயற்றியது.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய அரசியல் அமைப்புச் சட்டங்களில் இதுவே மிகப் பெரியதாகும். இச் சட்டத்தை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பலர் எதிர்த்தனர். இந்திய அரசியல் நிலைக்கு இச்சட்டம் மிகையானதென்றும், ஆங்கிலேயர் கருதினர். உண்மையான அரசியல் அதிகாரம் இந்தியர்களுக்கு வழங்கப்படவில்லை என்று இந்தியர் கருதினர். இச்சட்டம் மாபெரும் அரசியலமைப்பு மாளிகையாக அமைந்ததென்றாலும் அதனுள் ஒன்றும் இருக்கவில்லை.

### 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் சிறப்பியல்புகள்

இச்சட்டம் நிறுவ விரும்பிய கூட்டாட்சி முறை சிக்கல் நிறைந்து காணப்பட்டது. இருப்பினும், இந்திய அரசியல் சிக்கலைத் தவிர்க்க இம்முறையை அனைவரும் நாடினர். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களைத் தன்னாட்சி

மாகாணங்களாக மாற்றி, பின் அவைகளை அனைத்திந்தியக் கூட்டாட்சியில் இணைக்க இச்சட்டம் வகை செய்தது. இவ்வமைப்பில் இந்திய அரசுகளும் (சமஸ்தானங்களும்) சேரும் என எதிர் பார்த்தனர். சில அரசுகள் தம் விருப்பில் சேர்ந்தன.

மேலும், இணைப்பு பற்றிய உடன்படிக்கை எல்லா இந்திய அரசுகளுக்கும் ஒரே படித்தாய் இருக்கவில்லை. அரசுக்கரசு மாறிமாறிச் செயல்பட்டது. இதனால் மத்திய அரசாங்கத்திற்கும் இந்திய அரசுகளுக்குமிடையே உறவு ஒரே மாதிரியாக அமையவில்லை. ஆனால், சட்டமியற்றல், நிர்வாகம் போன்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் ஒரே சீராக மாகாணங்களில் செயல்படுத்தியது.

மத்திய அரசாங்கம் பொறுப்புடையதாக அமையவில்லை. 1919-ல் மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி முறை இச்சட்டத்தால் மத்திய அரசாங்கத்திற்கு வந்தது. நிர்வாகத் தலைவராகிய கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே பொறுப்புடையவர். இந்தியாவில் அவர் யாருக்கும் பொறுப்புடையரல்லர். பாதுகாப்பு, வெளிவிவகாரங்கள் போன்ற துறைகள் கவர்னர் ஜெனரலின் சொந்தப் பொறுப்பில் இருந்தன. மத்திய சட்ட சபைக்குப் பொறுப்புடைய அமைச்சர்கள் கூட இவை பற்றி ஒன்றும் கேட்க முடியாது. மக்கள் நலன் மறந்து வல்லாட்சி முறையை மேற்கொண்டாலும் மத்திய சட்ட சபையால் அவரைக் கண்டிக்க முடியாது.

மத்திய சட்டசபைக்கு மாகாணங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பின. ஆனால், இந்திய அரசுகளோ உறுப்பினர்களை நியமனம் செய்தன. மேலும் இந்திய அரசுகள் சட்டசபையில் மாகாணங்களைவிட மிகையான இடங்களைப் பெற்றிருந்தன.

கவர்னர் ஜெனரலின் மிகையான சிறப்பு அதிகாரங்கள் ஒருவிதமான ஒருமுக ஆட்சி உருவாக வகை செய்தன.

சட்டமியற்றும் அதிகாரங்களை 1935-ம் ஆண்டுச் சட்டம் மத்திய மாகாண, பொதுப் பட்டியலென மூவகைப் பட்டியலில் அடக்கிற்று. இப் பங்கீடு சிறப்பாகவும், விளக்கமாகவும், சரியான நுட்பமாகவும் காணப்படுவதை இச்சட்டத்தின் மிகச் சிறந்த இயல்பாகக் கொள்ளலாம். பங்கீடு செய்யப்பட்டது போக எஞ்சிய அதிகாரத்தை (Residuary Powers) மத்திய அரசாங்கத்திற்கோ, மாகாணங்களுக்கோ வழங்காது அதனை கவர்னர் ஜெனரலிடமே விட்டு வைத்தது. அவர் தம் சொந்த விருப்பில் எஞ்சிய அதிகாரத்தையொட்டிச் சட்டம் இயற்றும்படி மத்திய அரசாங்கத்தையோ அன்றி மாகாண அரசாங்கத்தையோ கேட்கலாம். இந்திய அரசுகளைப் பொறுத்த வரையில் எஞ்சிய அதிகாரம் அரசரையே சாரும்.

இச்சட்டத்தின்படி மத்திய அரசாங்கத்திற்கு மாகாணங்களில் அதிகமான ஆட்சி அதிகாரங்கள் இருந்தன. கூட்டாட்சிச் சட்டங்களைத் தவறாமல்

மாகாணங்களில் செயல்படுத்த முடியும். ஆனால், கூட்டாட்சிச் சட்டங்களை இந்திய அரசுகளின் மன்னர்களே செயல்படுத்த முடியும்.

இச்சட்டத்தின்படி கூட்டாட்சி அமைய அறுநூற்றுக்கு அதிகமான இந்திய அரசுகளில் முந்நூறாயினும் உறுப்பரசுகளாய்ச் சேரவேண்டும். இவ்வுறுப்பரசுகள், பரப்பாலும், மக்கள் தொகையாலும், செல்வமூலங்களாலும், அரசாங்க அமைப்பாலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்தன. இதுபோன்றதொரு கூட்டாட்சி அமைப்பு, வரலாறு காணாததாகும்.

இவ்வியல்புகளைக் கொண்ட கூட்டாட்சி வெறும் கானல் நீராகத் தெரிந்தாலும், 1937-ல் செயல்படத் தொடங்கிய போது மத்திய, மாகாண அரசாங்கங்களின் தொடர்பினையும் உறவினையும் கூட்டாட்சிக் கோட்பாடுகள் தெளிவுபடுத்தினவெனக் கூறலாம்.

**கூட்டாட்சி நிர்வாகத் துறை**

கவர்னர் ஜெனரல், அவரது கவுன்சிலர்கள், அமைச்சர் குழு இவர்களைக் கொண்டியங்குவது நிர்வாகத் துறையாகும். கவர்னர் ஜெனரலின் சொந்தப் பொறுப்பில் இருந்த அதிகாரங்கள் பற்றி அறிவுரை கூற கவுன்சிலர்களுக்கு உரிமை இருந்தது. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த மற்ற அதிகாரங்கள் பற்றி அறிவுரை கூற அமைச்சரவைக்கு உரிமையுண்டு. கவர்னர் ஜெனரல், அமைச்சர்களைப் பதவியில் அமர்த்துகிறார். அவ்வமைச்சர்கள் மத்திய சட்டசபைக்குப் பொறுப்புடையவர்களாய் இருக்கவேண்டும்.

இந்திய அமைதியைக் காப்பதும், நிதிநிலையைப் பேணுவதும், சிறுபான்மையினரின் நலன் காத்தலும், அகில இந்தியப் பணிகளின் (All India Services) உரிமைகளைப் பாதுகாத்தலும், பிரிட்டன், பர்மா நாடுகளின் வாணிகப் பொருள் தடையின்றி இந்தியா வந்தடைவதைப் பார்வையிடலும், இந்திய மன்னர்களின் உரிமை களைக் காத்தலும் கவர்னர் ஜெனரலின் சிறப்பான பொறுப்புகளாகும்.

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களும், பொறுப்புகளும் கவர்னர் ஜெனரலிடம் விடப்பட்டிருத்தலைக் காணலாம். இவற்றைச் செயல்படுத்துவதில் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே பொறுப்புடையவர்; இந்திய சட்ட சபைக்கு இவர் பொறுப்புடையரல்லர்.

**கூட்டாட்சி சட்டசபை**

ராஜ்ய சபையும் (Council of State) அசெம்பிளியும் (House of Assembly) சேர்ந்ததே மத்திய சட்ட சபையாகும். இவைகளை முறையே மேல்சபை என்றும் கீழ்ச்சபை என்றும் வழங்குவர். மேல்சபையில் 260 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 156 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிற்கெனவும், 104 பேர் இந்திய அரசுகளுக்கு எனவும்

பிரித்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் இந்தியாவிற்கு எனப் பிரிக்கப்பட்ட 156 இடங்களில் ஐரோப்பியர்களுக்கு ஏழு இடங்களும் ஆங்கிலோ இந்தியர்களுக்கென ஓர் இடமும், இந்திய கிறித்துவர்களுக்கு இரண்டு இடங்களும், கவர்னர் ஜெனரலின் நியமனத்திற்கு ஆறு இடங்களும் ஒதுக்கப்பட்டன. எஞ்சிய 140 இடங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்து வழங்கினர். இச் சபை நிரந்தரமானது. இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டுகளுக்குப்பின் விலகிக்கொள்வர்.

பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளை மாகாணச் சட்டசபைகள் தேர்ந்தெடுத்தனுப்பின. இந்திய அரசுகளின் பிரதிநிதிகளை மன்னர்கள் நியமித்தனர். கீழ்ச்சபையில் 375 உறுப்பினர்களிருந்தனர். இவர்களில் 250 பேர் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளாக இருப்பர். இவ்விருநூற்றைம்பது பேர்களில் நால்வரை வாணிகம், ஆலைத் தொழில், தொழிலாளர் நலனுக்கென ஒதுக்கினர். எனவே, மீதமுள்ள 246 பேர்களையும் மக்கள் தொகை அடிப்படையில் நிலம் சார்ந்த தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்தனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள். இவ்வகை ஈரங்க சட்டசபை, கருத்துகளின் கலப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. பிரிட்டிஷ் இந்தியர், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், இந்திய அரசுகளின் உறுப்பினர்களை இந்திய மன்னர்கள் நியமித்தனர். இந்திய அரசுகளுக்கு மிகையாகப் பிரதிநிதித்துவம் வழங்கினர். பல்வேறு இனங்களுக்கும் இனவழிப் பிரதிநிதித்துவம் கொடுத்து அம்முறையை நிலைப்படுத்தினர். இவற்றிற்கெல்லாம் மேலாக கவர்னர் ஜெனரலிடம் நியமன உரிமையும் இருந்தது. இரு சபைகளும் சமமான அதிகாரங்களைப் பெற்றிருந்தனவெனினும் நிதிபற்றிய மசோதாக்களை எழுப்பக் கீழ்ச்சபை உரிமை பெற்றிருந்தது. கீழ்ச்சபையின் நிதி அதிகாரம் மிகக் குறைவேயாம்.

மத்திய, பொதுப்பட்டியலையொட்டிச் சட்டசபை சட்டங்கள் இயற்றலாம். கவர்னர் ஜெனரலின் இசைவு பெற்றுச் சில மசோதாக்களை நிறைவேற்ற வேண்டுமென்றிருந்தமையால் சட்டசபையின் அதிகாரமும் குறிப்பிட்ட அளவிற்குக் குறைந்திருந்தது. மேலும் சபையின் நடைமுறை விதிகளை கவர்னர் ஜெனரல்' தணிக்கை செய்வதாலும், சபை நடைமுறைகளில் தலையிட்டுத் தடை செய்வதாலும் சட்டசபை, உரிய அதிகாரங்களைத் தக்க முறையில் செயலாற்ற முடியவில்லை.

**மாகாண சுயஆட்சி**

1935-ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின்படி உருவாகிய மாகாண ஆட்சி முறைக்கு மாகாண சுய ஆட்சி எனப் பெயர். இச் சட்டத்தில் இதுபற்றிக் காணப்படும் பிரிவுகளே நம் நாட்டினரைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்புடையனவாம். மேலிருந்து எந்தவிதமான தலையீடும் இல்லாமல் மாகாண ஆட்சியை சுயேச்சையுடன் நடத்திச் செல்ல இம்முறை வழிவகுத்தது. ஒவ்வொரு கவர்னர் மாகாணத்திலும் ஒரு நிர்வாகத்துறையும் சட்டசபையும் இருக்கும். இவைகளுக்கான அதிகாரங்கள் நன்றாக வரையறுக்கப்பட்டிருந்தன. மத்திய

அரசாங்கத்தின் தணிக்கையோ, கட்டுப்பாடோ இன்றி சுயேச்சையுடன் தம் கொள்கைகளைச் செயல்படுத்தலாம். மாகாண அதிகாரங்களைச் சட்டம், திட்டவட்டமாகக் கூறி இருப்பதால் அவைபற்றிய சட்டங்களைச் செயல்படுத்த மாகாண அரசாங்கம் முன்வந்தது.

**மாகாண நிர்வாகத் துறை**

இச்சட்டத்தின்படி மாகாண நிர்வாகப் பொறுப்பு ஒரு கவர்னரிடமிருந்தது. இந்தியாவிற்கான ராஜாங்கச் செயலாளரின் மதியுரையின் பேரில் பிரிட்டிஷ் மன்னர் கவர்னரை நியமிக்கிறார். இவர் ஐந்தாண்டுகள் பதவியில் இருப்பார். இவர் பதவிக்கேற்றவாறு தக்க ஊதியம் பெறுவார். கவர்னர் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் அமைச்சர்களைக் கலந்து கொண்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தம் சொந்தப் பொறுப்பில் செய்தால் அதுபற்றி அமைச்சர்களின் கருத்தை அறிய விரும்பலாம். ஆனால், அமைச்சர்களின் கருத்தை ஏற்று நடக்கவேண்டுமென்பது கிடையாது. அமைச்சர்களைக் கலந்து கொள்ளாமல் தம் போக்கில் கவர்னர் சில செய்யலாம். இச் சிறப்புரிமைகளைச் சட்டம் அவருக்கு வழங்கிற்று.

கவர்னரின் பொறுப்புகளைச் செயல்படுத்தவும், அவருக்கு உதவவும். ஓர் அமைச்சரவை இருந்தது. அமைச்சர்களை, கவர்னரே நியமித்தார். சட்டசபை பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடைய ஒருவருடன் கலந்து ஆலோசித்து அமைச்சர்களை கவர்னர் நியமிப்பார். அமைச்சர்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வை வளர்க்க கவர்னர் ஆவன செய்ய வேண்டும். தக்க அதிகாரங்களுடன் மாகாண அரசாங்கம் நடந்ததென்றாலும் எச்சரிக்கையாக கவர்னருக்குச் சில சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அமைதிக்குத் தீங்குவராமல் காப்பதும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதும், பிரிட்டிஷ் குடிமக்களைப் பேணுதலும், இந்திய மன்னர்களின் உரிமைகளையும் அவர்களின் பெருமைகளையும் காப்பதும், கவர்னரின் தலையாய கடமைகளாம்.

பொறுப்புடைய அரசாங்கத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மிகையான சிறப்பு அதிகாரங்களைப் பார்க்கும்போது அது மாகாண சுயஆட்சியா அல்லது கவர்னரின் சுயஆட்சியா என்ற ஐயப்பாடு எழுகின்றது. ஏனெனில், கவர்னர் தம் சிறப்பு அதிகாரங்களைச் செயல்படுத்தும் பொழுது அவர் கவர்னர் ஜெனரலுக்கு மட்டுமே பொறுப்புடையவராகிறார். இருப்பினும் பொறுப்புடைய ஓர் அரசாங்கத்தை மாகாணங்களில் உருவாக்க உண்மையாகவே கவர்னர் விரும்பினால் அதைத் தடையின்றிச் செய்யலாம்.

**மாகாணச் சட்டசபை**

ஆறு மாகாணச் சட்டசபைகள் ஈரங்கச் சட்டசபைகளாகவும், ஐந்து மாகாணங்களில் சட்டசபைகள் ஓரங்கச் சட்டசபைகளாகவும் இருந்தன. ஈரங்கச் சட்ட சபையாயின் கீழ்ச்சபை அசம்பிளியெனவும், மேல்சபை கவுன்சிலெனவும்

பெயர் பெற்றன். ஒரு சபை மட்டுமிருந்தால் அசம்பிளி என்ற பெயருடன் விளங்கிற்று.

சட்டசபையின் உறுப்பினர்கள் பொதுத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறவில்லை. தொகுதிகள், சாதி, சமயம், இனம், பாலினம் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு அவைகளிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனுடன் ஆலைத் தொழில், வாணிகம், நிலவுடைமை, பல்கலைக்கழகம், தொழிலாளர் பற்றிய துறைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருந்தது. பெண்களுக்கென ஒரு சில இடங்களைத் தனித்து வழங்கினர். உறுப்பினர்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நிலவரி செலுத்தியவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. கல்வித்தரத்தாலும் இராணுவ சேவையாலும் இன்னும் சிலர் வாக்குரிமை பெற்றனர். அதாவது நூறு பேர்களில் பதினான்கு பேர்களுக்கு வாக்குரிமை இருந்தது. 1919 ஆம் ஆண்டுச் சட்டப்படி வாக்குரிமை நூற்றுக்கு மூன்று பேர்களுக்குத்தான் கிடைத்தது. வாக்குரிமை பற்றிய விதிகள் மாகாணத்திற்கு மாகாணம் மாறியிருந்தன. உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும்.

கவுன்சில் (மேல் சபை) ஒரு நிரந்தரமான சபையாகும். இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒருவர் மூன்றாண்டு முடிவில் விலகிக் கொள்வார். சபை உறுப்பினர்களின் பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சிலரை நேர்முகமாகவும், சிலரை மறைமுகமாகவும் தேர்ந்தெடுப்பர். இரு சபைகளுக்கும் சமமான அதிகாரம் இருந்தாலும், நிதிபற்றிய மசோதாக்களை எழுப்பக் கீழ்ச்சபைக்கே அதிகார மிருந்தது. இரு சபைகளுக்கும் தொடர்ந்து ஓர் ஆண்டு பூசல் இருந்தால் கவர்னர் இரு சபைகளையும் ஓர் இடத்தில் கூட்டிப் பூசலைத் தீர்ப்பார்.

மாகாணப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இனங்கள் பற்றிச் சட்டமியற்ற இரு சபைகளுக்கும் அதிகாரமுண்டு. இருப்பினும் இரண்டு மூன்று மாகாணங்கள் சேர்ந்து ஒரு தீர்மானத்தின் மூலம், தங்கள் பட்டியலில் காணும் ஓர் இனம்பற்றிச் சட்டமியற்றித்தர மத்தியச் சட்டசபையைக் கேட்கலாம். கவர்னர் ஜெனரலின் இடர்க்காலப் பேரறிக்கையையொட்டி, மாகாணப் பட்டியலுக்குரிய ஒரு பொருள் பற்றி மத்தியச் சட்டசபை சட்டமியற்றலாம். மத்தியச் சட்டத்துடன் முரணாகாவகையில் மாகாணச் சட்ட சபைகள் பொதுப்பட்டியலில் உள்ள இனங்கள் பற்றிச் சட்டமியற்றிச் செயல்படுத்தலாம். முரணாகவுள்ள மாகாணச் சட்டங்கூட கவர்னர் ஜெனரலின் இசைவினைப் பெற்றுவிட்டால் சட்டமாக நிலவும்.

**கவர்னரின் சட்டமியற்றும் அதிகாரங்கள்**

மாகாண அரசாங்கத்தின் அதிகாரங்களனைத்தும் கவர்னரிடமிருந்து பெறப்படுவன. சட்டசபைகளின் அதிகாரக்குறைவிற்கு ஒரு காரணமாக கவர்னரிடம் குவிந்திருந்த அதிகாரங்களைச் சிலர் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

சட்டசபையைக் கூட்டவும், சபையின் தொடர்க்கூட்டங்களைத் தள்ளிவைக்கவும். சபையைக் கலைக்கவும் கவர்னர் அதிகாரம் பெற்றிருந்தார். தேவையான போது, இரு சபைகளையும் ஓர் இடத்தில் கூட்டவும், பேருரை நிகழ்த்தவும், செய்திகள் அனுப்பவும் கவர்னருக்கு அதிகாரமுண்டு. சட்டசபைகளில் நிறைவேறிய மசோதாக்களுக்கு இசைவு தரவும், மறுக்கவும், மசோதாக்களை மறு ஆய்விற்கு அனுப்பவும், மசோதாக்களை கவர்னர் ஜெனரலின் பார்வைக்காக முடக்கி வைக்கவும் கவர்னர் அதிகாரம் பெற்றிருந்தார். சபைகளின் நடைமுறைபற்றிய விதிகளை நிர்ணயிக்கும் உரிமை கவர்னரிடமிருந்தது. கவர்னரின் சட்டங்களையோ அல்லது அவசரச் சட்டங்களையோ மாற்றும் நோக்கமுடைய மசோதாக்களைச் சபை முன் கொண்டு வர கவர்னரின் ஒப்புதல் வேண்டும். அதேபோன்று காவல்படைகள் பற்றிய மசோதா சபைக்கு வருமுன் கவர்னரின் ஏற்பினைப் பெறவேண்டும்.

சட்டசபையின் நிதிபற்றிய அதிகாரம் மிகக் குறைவானதே. சட்டசபை தலையிட முடியாத சாட்டப்பட்ட நிதி இனம் கவர்னர் பொறுப்பில் இருந்தது. இவ்வினம்பற்றி சபை விவாதிக்க முடியாது. சபை விவாதிக்கக்கூடிய இனங்களிலும் கவர்னர் தலையிடலாம். எனவே, நிதித்துறையில் சட்டசபை ஒன்றும் செய்யமுடியாத அளவிற்குப் பலமற்றிருந்தது.

மாகாண அரசாங்கம் செயல்பட முடியாததொரு நிலை உருவாகிறதென்று கவர்னர் கருதினால் இச் சட்டத்து 93-வது பிரிவுப்படி ஒரு பேரறிக்கை மூலமாகத் தானே அரசாங்கத்தை ஏற்று நடத்தலாம். பாராளுமன்ற முறையில் மாகாண அரசாங்கம் இயங்கி வந்தாலும் அதை இயக்கும் சக்தி கவர்னரிடமே இருந்து வந்தது. 1935-ம் ஆண்டுச் சட்டத்தின் மாகாண சுயஆட்சி பற்றிய பிரிவுகளே செயற்பாட்டிற்கு வந்தன. கூட்டாட்சி பற்றிய பிரிவுகள் செயல்படவில்லை. இருப்பினும், மாகாண அமைச்சரவைகளும் கவர்னர்களும் அநேக இடர்ப்பாடுகளுக்கிடையில் தம் கடமை அறிந்து ஒத்துழைத்தனர். '

1937-ல் மாகாணச் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடந்தன. தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி கலந்து கொண்டு ஐந்து மாகாணங்களில் பெரும்பான்மை பெற்றது. மூன்று மாகாணங்களில் காங்கிரஸ் சட்டசபையில் தனிப்பெருங் கட்சியாக இருந்தது. மூன்று மாகாணங்களில் காங்கிரஸ் சிறுபான்மைக் கட்சியாக இருந்தது. பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களைக் கலந்துகொண்டு கவர்னர்கள் அமைச்சரவைகளை உருவாக்கினார்கள். இவ்வமைச்சரவைகள் இரண்டாண்டுகள் நற்பணியாற்றின. இச்சட்டத்தின் பயனாக இந்தியர்கள் அமைச்சரவையை உரு வாக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். பெற்ற வாய்ப்புகளை நன்முறையில் செயல்படுத்தி மக்களின் செல்வாக்கையும் பெற்றனர். முதன் முறையாக மாகாணச் சட்டசபைகள் உண்மையிலேயே சட்டசபைகளாகச் செயல்படத் தொடங்கின.

# பாடம் 17
# இந்திய விடுதலைச் சட்டம், 1947

**(Indian Independence Act 1947)**

**இந்திய விடுதலைச் சட்டம் என்றால் என்ன?**

1947-ம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டம் என்பது இந்தியாவுக்கு விடுதலை அளிப்பதற்காக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஆகும். அதன் மூலமாக, இங்கிலாந்து இந்தியாவை இந்திய ஒன்றியம் மற்றும் பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிவினை செய்தது.

ஜூன் 15, 1947 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறிய இச்சட்டத்துக்கு ஜூலை 18ம் தேதி இங்கிலாந்து முடியாட்சியின் ஒப்புதல் கிடைத்தது.

மவுண்ட்பேட்டன் பிரபுவால் உருவாக்கப்பட்ட ஜூன் 3 திட்டம் அல்லது மவுண்ட்பாட்டன் திட்டத்துக்கு இந்திய தேசிய காங்கிரசு, முஸ்லிம் லீக் மற்றும் சீக்கியர்களின் பிரதிநிதிகளின் ஒப்புதல் கிடைத்தபின்பு அதனடிப்படையில் இச்சட்டம் இயற்றப்பட்டது.

**இச்சட்டத்தின் முக்கியக் கூறுகள்**

- பிரிட்டிஷ் இந்தியாவில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரு மேலாட்சி அரசுகள் அமைக்கப்படும்.
- அவை இரண்டும் உருவாகும் தேதி ஆகஸ்ட் 15, 1947; அன்றே அப்பகுதிகளில் இங்கிலாந்து பேரரசின் ஆட்சி முடிவடையும்.
- இங்கிலாந்து பேரரசரின் அதிகாரப்பூர்வ பட்டயங்களில் இருந்து "இந்தியாவின் பேரரசர்" என்பது நீக்கப்படும்.
- இந்தியாவின் சமஸ்தானங்களும் மன்னர் அரசுகளும் இங்கிலாந்து பேரரசுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தங்கள் முடிவுக்கு வரும்.
- அவர்கள் தாங்கள் விரும்பியபடி இரு மேலாட்சி அரசுகளுள் ஏதேனும் ஒன்றுடன் இணைந்து கொள்ளலாம்.
- இவ்விரு அரசுகளும் உள்விவகாரம், வெளிவிவகாரம், தேசியப் பாதுகாப்பு என அனைத்து விசயங்களிலும் முழு தன்னாட்சி அதிகாரம் பெற்றிருக்கும்.

- இங்கிலாந்து பேரரசர் பெயரளவில் மட்டும் அவற்றின் நாட்டுத் தலைவராக இருப்பார்.

- அவரது பிரதிநிதியாக "தலைமை ஆளுனர்" இருப்பார்.

- இரு மேலாட்சி அரசுகளும் தங்கள் அரசியல் நிர்ணய மன்றங்களைக் கூட்டி புதிய அரசியலமைப்புச் சட்டங்களை இயற்றிக் கொள்ளலாம்.

- இரு மேலாட்சி அரசுகளும் பொதுநலவாயத்தின் உறுப்பினர்களாக இருக்கும்.

- ஆனால் விருப்பமெனில் அவ்வமைப்பிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

- இச்சட்டத்தின் படி பாகிஸ்தான் 14 ஆகஸ்டிலும், இந்தியா 15 ஆகஸ்டிலும் விடுதலை பெற்றது.

- முகம்மது அலி ஜின்னா பாகிஸ்தான் ஆளுநராக நியமிக்கப்பட்டார் மற்றும் மவுண்ட்பேட்டனின் இந்தியாவின் கவனர் ஜெனரல் ஆனார்.

# பாடம் 18

# இந்திய அரசியலமைப்பு 1950

## (Constitution of India)

**இந்திய அரசியலமைப்பு என்றால் என்ன?**

இந்திய அரசியலமைப்பு என்பது இந்தியாவின் உயர்ந்தபட்ச சட்டமாகும். உலகின் மிகப்பெரிய குடியரசு நாடான சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு, உலகிலேயே மிக நீளமான அரசியலமைப்பாகும். இது எழுதப்பட்டு சட்டமாக்கப்பட்ட அரசியலமைப்பு, நெகிழாத்தன்மையும் நெகிழ்ச்சித் தன்மையும் உடையது, கூட்டாட்சியும் ஒருமுகத்தன்மையும் கொண்டது, பொறுப்புள்ள அரசாங்கத்தை உடையது என்று பல சிறப்பம்சங்களைக் கொண்டது. இது அடிப்படை அரசியல் கொள்கைகள், அரசாங்க நிறுவனங்களின் கட்டமைப்பு, நடைமுறைகள், சக்திகள், மற்றும் அடிப்படை உரிமைகள், உத்தரவுக் கொள்கைகள், குடிமக்களின் கடமைகள் ஆகியவற்றின் கட்டமைப்புகளை உள்ளடக்கியுள்ளது. இது தான் இதுவரை உலக நாடுகளின் இடையே எழுதப்பட்டதில் மிக நீண்ட அரசியலமைப்பாகும். இதில் மொத்தம் 25 பிரிவுகள், 12 அட்டவணைகள், 103 திருத்தங்கள், 448 உட்பிரிவுகள் (Articles) மற்றும் 117,369 சொற்கள் உள்ளன. இது ஆங்கிலப் பதிப்பைத் தவிர, ஒரு அதிகாரப்பூர்வ இந்தி மொழிபெயர்ப்பினையும் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் பணி 29 ஆகஸ்ட் 1947 அன்று முதல் இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றத்தால் தொடங்கப்பட்டது. முழுமையடைந்த அரசியலமைப்பு 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. (இத்தேதி 26 ஜனவரி 1930, பூரண சுயராஜ்ய நாள் நினைவாகத் தேர்வு செய்யப்பட்டது). இதன் மூலம் இந்தியா ஒரு ஒருங்கிணைந்த, தன்னாட்சி கொண்ட, குடியரசின் மக்களாட்சிக் கோட்பாட்டின்படி வழிநடத்துகின்ற நாடாக அறிவித்துக் கொண்டது. நடைமுறைக்கு வந்த பிறகு, அதுவரை நாட்டின் அடிப்படை நிர்வாக ஆவணமாக இருந்த இந்திய அரசு சட்டம், 1935 என்னும் சட்டத்திற்கு பதில் இந்திய அரசியலமைப்பு நாட்டின் அடிப்படை நிர்வாக ஆவணமாக மாற்றியது. அரசியலமைப்புக்கு வலுசேர்க்கும் விதமாக 1976-ல் நடைபெற்ற திருத்தங்களில் இந்தியா பொதுவுடைமை மற்றும் மதச்சார்பின்மை இவைகளை தன் கொள்கைகளாக அறிவித்தது. இந்தியா தனது அரசியலமைப்பின் ஏற்பை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ம் தேதியை குடியரசு நாளாகக் கொண்டாடுகிறது.

இந்திய அரசியலமைப்பின் படி இந்தியா ஒரு கூட்டாட்சி (federalism) நாடாகும். இருப்பினும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 'கூட்டாட்சி' (கூட்டரசு - federal government) என்ற சொல்லிற்குப் பதிலாக 'ஒன்றியம்' (union) என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் முகப்புரை (preamble) யில், "இறையாண்மை உடைய மக்களாட்சி, சமதர்ம, சுதந்திரக் குடியரசு" என்றும் "இந்திய ஒன்றியம் என்றும் இந்தியா பெயரிடப்பட்டுள்ளது. இது இச்சட்டத் தொகுப்பின் முழுப் புரிதலையும் தரும்படி அமைக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியக் குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகள் தொடக்கத்திலேயே வழங்கப்பட்டிருந்தாலும், பின்பு அடிப்படைக் கடமைகளும் உருவாக்கப்பட்டன. இந்திய அரசமைப்பின் தனிச் சிறப்புக்களில் 'அடிப்படை உரிமைகளும்' அடங்கும்.

இந்திய அரசமைப்பு சட்டம் உருவாக்கப்படும் போது, பல்வேறு நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களின் கூறுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதனால் இந்திய அரசமைப்பு சட்டத்தை, 'கடன்களின் பொதி' என்பர். 'கூட்டாட்சி முறையை' கனடாவில் இருந்தும், 'அடிப்படை உரிமைகள்' அமெரிக்க ஐக்கிய நாடுகளிடம் இருந்தும், அடிப்படைக் கடமைகளை அன்றைய சோவியத் யூனியனிடமிருந்தும் பெற்றது. அரசியல் சட்டத்திருத்த முறையை தென்னாப்பிரிக்கா இருந்தும், மாநிலங்களவை நியமன எம்.பி.,க்கள் முறையை அயர்லாந்திடம் இருந்தும் பெற்றது.

**இந்திய அரசியலமைப்பு உருவான வரலாறு**

இந்திய துணைக்கண்டத்தின் பெரும்பாலான பகுதி 1858 லிருந்து 1947 வரை ஆங்கிலேயர் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்தது. இந்த காலத்தில் வெளிநாட்டு ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற இந்திய சுதந்திர இயக்கம் படிப்படியாக உயர்வு கண்டது. 1934-ல் இந்தியாவிற்கு ஒரு அரசியல் நிர்ணய மன்றம் வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. பின்னர் 1936-இலும் 1939-இலும் இக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. அதன்படி, அரசியல் நிர்ணய மன்றத்தை உருவாக்கலாம் என கிரிப்ஸ் தூதுக்குழு மார்ச்-1942-ல் பரிந்துரைத்தது. பின்னர் வந்த அமைச்சரவைத் தூதுக்குழு (மே-1946) அரசியல் நிர்ணய மன்றம் ஏற்படுத்த வேண்டும் எனப் பரிந்துரைத்தது. அதன்படி அரசியல் நிர்ணய மன்றத்திற்கான தேர்தல், ஜூலை 1946-ல் நடைபெற்றது. டிசம்பர் 1946-ல் அரசியல் நிர்ணய மன்றம் கூடியது. அம்மன்றத்தின் தற்காலிக தலைவராக சச்சிதானந்த சின்ஹா டிசம்பர் 09 தேர்வுசெய்யப்பட்டார். பிறகு நிர்ணய மன்றத்தின் நிரந்தர தலைவராக டிசம்பர்-11, 1946-ல் இராசேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947, ஆகஸ்ட் 15-ல் பிரித்தானிய இந்தியாவானது இந்திய மாகாணம், பாகிஸ்தான் மாகாணம் என்ற இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டதால் சுதந்திர இந்தியாவிற்கான அரசியலமைப்பை மட்டும் உருவாக்கும் பணியை அரசியல் நிர்ணய மன்றம் செய்ய வேண்டியதாயிற்று.

**இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்றம்**

ஒன்றிய மற்றும் மாநில சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களால் அரசியலமைப்பு

நிர்ணய மன்றம் அமைக்கப்பட்டது. ஜவகர்லால் நேரு, சி ராஜகோபாலாச்சாரி, ராஜேந்திர பிரசாத், சர்தார் வல்லபாய் படேல், சந்திப் குமார் படேல், டாக்டர் அம்பேத்கர், மவுலானா அபுல் கலாம் ஆசாத், ஷ்யாமா பிரசாத் முகர்ஜி, நளினி ரஞ்சன் கோஷ், மற்றும் பால்வந்த் சிங் மேத்தா ஆகியோர் சட்டமன்றத்தில் முக்கிய பிரமுகர்களாக இருந்தனர். தாழ்த்தபட்ட வகுப்புகளை சேர்ந்த 30 மேற்பட்ட உறுப்பினர்கள் அங்கு இருந்தனர். பிராங்க் அந்தோணி ஆங்கிலோ இந்திய சமூகத்தை பிரதிபலித்தார். பார்சி இனத்தவர்களை ஹெச்பி மோடி பிரதிபலித்தார். சிறுபான்மையினர் குழுவின் தலைவராக, ஆங்கிலோ இந்தியர்கள் தவிர மற்ற அனைத்து கிரிஸ்துவர்களின் பிரதிநிதியாக ஃஅரென்ட்ர ஊமர் முகெர்ஜீ என்ற புகழ்பெற்ற கிரிஸ்துவர் இருந்தார். அரி பகதூர் குறூங் கோர்கா சமூகத்தை பிரதிபலித்தார். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், பி ஆர் அம்பேத்கர், பெனகல் நர்சிங் ராவ் மற்றும் கி.மீ. முன்ஷி, கணேஷ் மவ்லன்கர் போன்ற முக்கிய நடுவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். சரோஜினி நாயுடு, ஹன்சா மேத்தா, துர்காபாய் தேஷ்முக், ராஜ்குமாரி அம்ரித் கவுர் மற்றும் விஜயலட்சுமி பண்டிட் போன்றவர்கள் முக்கியமான பெண்கள் உறுப்பினர்களாக இருந்தனர். அரசமைப்பு மன்றத்தின் முதல் ஜனாதிபதியாக டாக்டர் சச்சிதானந்தன் சின்ஹா இருந்தார். பின்னர், ராஜேந்திர பிரசாத் சட்டமன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசமைப்பு மன்ற உறுப்பினர்கள் டிசம்பர் 9, 1946 அன்று முதல் முறையாகக் கூடினர்.

**அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழு**

1947, ஆகஸ்ட் 29 -ல் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத டாக்டர் பீமாராவ் அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு (Drafting committee) உருவாக்கப்பட்டது. பீமாராவ் அம்பேத்கர், என். கோபாலசாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கே. எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா, என். மாதவ ராவ் மற்றும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21-ல் ஒப்படைத்தது. நவம்பர் 4-ல் அரசியல் நிர்ணய மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இவ்வறிக்கை, முழு வடிவம் பெற்று 1949 நவம்பர் 26-ல் அரசியல் நிர்ணய மன்றத்தின் தலைவர் இராஜேந்திரப் பிரசாத்தின் கையொப்பம் பெற்றது. ஜனவரி 24-ல் நடைபெற்ற அரசியல் நிர்ணய மன்றத்தின் கடைசிக் கூட்டத்தில் சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக இராசேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லாகூரில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டில் 1930, ஜனவரி 26-ல் இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றே தீருவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நினைவாக ஜனவரி 26 தேதியை இந்தியக் குடியரசு நாளாக ஏற்பது என்றும் அரசியல் நிர்ணய மன்ற முடிவு செய்தது. "இந்திய அரசியலமைச் சட்டம்-1950" இந்தியக் குடியரசு தினத்தில் நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து, இந்தியா பிரிட்டிஷ் அரசாட்சியில் இருந்து நீக்கப்பட்டது.

## இந்திய அரசியலமைப்பின் அமைப்பு

அரசியலமைப்பு அதன் தற்போதைய வடிவத்தில் ஒரு முன்னுரை, 450 ஷரத்துக்கள், 12 அட்டவணை, 2 பின் இணைப்பு மற்றும் 114 திருத்தங்களை கொண்டு மொத்தம் 24 பகுதிகளைக் கொண்டுள்ளது. இது கூட்டாட்சி தத்துவம் கொண்டது என்றாலும், ஒரு வலுவான ஒற்றைச் சார்பு கொண்டிருக்கிறது.

## முகவுரை

இந்திய அரசியலமைப்பின் முகப்புரை என்பது இந்தியஅரசியலமைப்பின் அறிமுகப்பகுதியாகும்.

"நாம், இந்திய மக்கள், உறுதிக் கொண்டு முறைப்படி தீர்மானித்து, இந்தியாவை ஓர் இறையாண்மை சமூகத்துவ சமயசார்பற்ற மக்களாட்சி குடியரசாக கட்டமைத்திட, மற்றும் இதன் எல்லா குடிமக்களுக்கும்

- சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதி
- எண்ணம், கருத்து, பக்தி, நம்பிக்கை மற்றும் வழிபாடு தன்செயலுரிமை;
- படிநிலை மற்றும் வாய்ப்பு சமத்துவம் ஆகியன உறுதிசெய்திட;

மற்றும் தனிநபர் கண்ணியத்தையும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைபாட்டையும் உறுதிப்படுத்த அனைவரிடத்திலும் உடன்பிறப்புணர்வை ஊக்குவித்திட இந்த 1949, நவம்பர் இருபத்தி-ஆறாம் நாள் நம்முடைய அரசியல் நிர்ணய மன்றத்தில் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பு முறைமையை, இதன்படி ஏற்று, சட்டமாக்கி நமக்கு தருகிறோம்.

## பகுதிகள்

பகுதி 1 (உட்பிரிவு 1-4) இந்திய ஒன்றியம் பற்றியது. அதாவது மாநில அமைப்பு. மாநில எல்லை வரையறை போன்றவை.

பகுதி 2 (உட்பிரிவு 5-11) இந்திய குடியுரிமை பற்றியது.

பகுதி 3 (உட்பிரிவு 12-35) அடிப்படை உரிமைகள்/ அது மறுக்கப்படும் போது அதற்கான தீர்வுகள்.

பகுதி 4 (உட்பிரிவு 36-51) அரசு கொள்கைக்கான வழி காட்டும் நெறிகள்.

பகுதி 4A ( உட்பிரிவு 51 A) அடிப்படை கடமைகள். (1976 ஆம் ஆண்டு 42வது திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது)

பகுதி 5 (உட்பிரிவு 52-151) ஒன்றிய அரசமைப்பு அதாவது குடியரசு தலைவர்,துணைக் குடியரசு தலைவர், நடுவண் அமைச்சரவை, பாராளுமன்றம் மற்றும் அதன் அமைப்பு, உச்ச நீதிமன்றம் மற்றும் அதன் அமைப்பு.

பகுதி 6 (உட்பிரிவு 152-237) மாநில அரசமைப்பு, ஆளுநர், மாநில அமைச்சரவை. மாநில சட்டமன்றம் / சட்ட மேலவை அதன் அமைப்பு உயர் நீதி மன்றம் அதன் அமைப்பு.

பகுதி 7 (உட்பிரிவு 238) அரசமைப்பு சட்டம் முதல் பட்டியலில் உள்ள மாநிலங்கள் பற்றியது- இந்தப் பிரிவு இப்போது நீக்கப் பட்டுள்ளது.

பகுதி 8 (உட்பிரிவு 239 -242) ஒன்றியப் பகுதிகள் குறித்து.

பகுதி 9 (உட்பிரிவு 243) உள்ளாட்சி நிர்வாகம் இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பகுதி 9A ( உட்பிரிவு 243P-243Z,243ZA-243ZG) நகராட்சி நிர்வாகம் இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பகுதி 10 (உட்பிரிவு 244) பட்டியல் சாதிகள்/ பழங்குடியினர்/ ஆங்கிலோ இந்தியர் ஆகியோர் குறித்து.

பகுதி 11 (உட்பிரிவு 245-263) ஒன்றிய மற்றும் மாநில அரசு உறவு, மாநிலங்ளுக்கிடையேயான உறவு.

பகுதி 12 (உட்பிரிவு 264-300) அரசின் நிதி குறித்த உட்பிரிவுகள் நிதி / நிதியினைக் கையாளும் நெறிகள்.

பகுதி 13 (உட்பிரிவு 301-307) இந்திய நாட்டில் வணிகம் செய்யும் நடைமுறைக்கான உட்பிரிவுகள்.

பகுதி 14 (உட்பிரிவு 308-323) அரசுப் பணிகள்

பகுதி 14A (உட்பிரிவு 323ஏ மற்றும் 323 பி) ஒன்றிய அரசின் தீர்ப்பாயங்கள்.

பகுதி 15 (உட்பிரிவு 324-329) தேர்தல்கள், தேர்தல் ஆணையம்.

பகுதி 16 (உட்பிரிவு 330-342) - பகுதிவாரி பெரும்பாண்மை சாதிகளுக்கான உரிமைகள் பற்றி.

பகுதி 17 (உட்பிரிவு 343-351) அலுவல் மொழி, வட்டார மொழி,நீதி மன்றங்களில் மொழி.

பகுதி 18 (உட்பிரிவு 352-360) அவசர நிலைக்கானது பிரகடனம் (எமெர்ஜென்சி)

பகுதி 19 (உட்பிரிவு 361-367) இதர (இதில் குடியரசு தலைவர், ஆளுநர் இந்தப் பதவிக்கான சட்ட சிறப்பு பாதுகாப்பு மற்றும் சில)

பகுதி 20 (உட்பிரிவு 368) இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தம் அதற்கான நடைமுறை.

பகுதி 21 (உட்பிரிவு 369-392) தற்காலிக, இடைநிலை மற்றும் சிறப்பு ஒதுக்கீடுகள்

பகுதி 22 (உட்பிரிவு 392-395) குறுகிய தலைப்பு, ஆரம்பம் தேதி, இந்தி மற்றும் ரிப்பீல்ஸில் அதிகாரப்பூர்வ உரை.

**அட்டவணைகள்**

- முதலாம் அட்டவணை (Articles 1 and 4)
- இரண்டாம் அட்டவணை (Articles 59(3), 65(3), 75(6), 97, 125, 148(3), 158(3), 164(5), 186 and 221)
- மூன்றாம் அட்டவணை (Articles 75(4), 99, 124(6)
- நான்காம் அட்டவணை (Articles 4(1) and 80(2))
- ஐந்தாம் அட்டவணை (Article 244(1))
- ஆறாம் அட்டவணை (Articles 244(2) and 275(1))
- ஏழாம் அட்டவணை (Article 246)
- எட்டாம் அட்டவணை (Articles 344(1) and 351)
- ஒன்பதாம் அட்டவணை (Article 31-B)
- பத்தாம் அட்டவணை (Articles 102(2) and 191(2))
- பதினோராம் அட்டவணை (Article 243-G)
- பனிரெண்டாம் அட்டவணை (Article 243-W)

**இந்திய அரசியலமைப்பின் முக்கிய கூறுகள்**

இந்திய அரசியலமைப்பில் 22 அத்தியாயங்களும் (Chapters) 12 அட்டவணைகளும் (Schedules) ((முதலில் 8 அட்டவணைகளே இருந்தன; 1951-ல் 9-ஆவது அட்டவணை சேர்க்கப்பட்டது) 22 அத்தியாயங்களும் 395 பிரிவு (Article) களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமைகள், அரசு நெறிமுறைக் கோட்பாடுகள், ஒன்றிய அரசின் நிர்வாகக்குழு, மாநில அரசுகள், நீதிமன்றங்கள் ஆகியன பற்றி சொல்லப்பட்டுள்ளது.

**அடிப்படை உரிமைகள்**

இந்திய அரசியலமைப்பின் முதல் அத்தியாயத்தில் நாட்டின் பெயர், ஆட்சிப்பரப்பு ஆகியனவும், இரண்டாவது அத்தியாயத்தில் குடிமை (Citizenship) பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. 12-ஆவது பிரிவு முதல் 35-ஆவது பிரிவு வரை

உள்ள மூன்றாவது அத்தியாயத்தில் இந்தியரின் அடிப்படை உரிமைகள் பட்டியலிடப்பட்டு உள்ளன. அவற்றுள்:

- இந்தியாவிற்குள் அனைவரும் சம பாதுகாப்பு (பிரிவு-14)
- வேறுபாடின்றி சட்டத்தின் முன் அனைவரும் சமம் (பிரிவு-15)
- பொதுவேலைவாய்ப்பில் சம வாய்ப்பு (பிரிவு-16)
- தீண்டாமை ஒழிப்பு (பிரிவு-17)
- பட்டங்கள் ஒழிப்பு (பிரிவு-18)
- ஏழு சுதந்திரங்கள் (பிரிவு-19 முதல் 22)
- சமய உரிமை (பிரிவு 25-28)
- சிறுபான்மையினரின் பண்பாட்டு,கல்வி உரிமை (பிரிவு 29-30)
- இவ்வுரிமைகளைக் காத்துக் கொள்ள உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் உரிமை (பிரிவு-32)
- ஆகியன முக்கியமானவையாகும். நெருக்கடி நிலையின் போது தற்காலிகமாக அடிப்படை உரிமைகள் நீக்கப்படும். ஆனால் நெருக்கடி நிலை ரத்தானதும் அடிப்படை உரிமைகள் தானாக அமலாகிவிடும்.

**அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்**

இந்தியாவிலுள்ள ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மக்களைப் பாதுகாத்து நல்வழிப்படுத்த, எந்தக் கோட்பாடுகளை உள்ளடக்கி சட்டங்கள் இயற்ற வேண்டும் என்பதே அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் (Directive Principles) ஆகும். இது பற்றி நான்காம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லோருக்கும் போதுமான வாழ்க்கை வசதிகள், வயதுக்கும் வேலைக்கு ஏற்ற பொருத்தமான வேலை, தொழில் செய்ய ஏற்ற சூழ்நிலை, வேலைக்கு ஏற்ற வயது வரை இலவச கட்டாயக் கல்வி, பொது சுகாதாரம், மது விலக்கு, வேளாண்மை வளர்ச்சி, வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு ஆகியன அக்கோட்பாடுகளுள் சிலவாகும். இக்கோட்பாடுகள் யாவும் அறிவுரைகளே; இவற்றைச் செயல்படுத்தக் கோரி அரசுகள் மீது நீதிமன்றங்களில் வழக்கு தொடர முடியாது.

**கூட்டாட்சி அமைப்பு**

அரசியலமைப்பு ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே அதிகாரங்களை பகிர்ந்து வழங்குகிறது. இது பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் அதிகாரங்களை மூன்று பட்டியல்,அதாவது ஒன்றிய அரசுப் பட்டியல், மாநில பட்டியல் மற்றும் உடன்நிகழ்கிற பட்டியல் என பிரிக்கிறது. தேசிய பாதுகாப்பு, வெளியுறவு கொள்கை, நாணய வழங்கல் போன்ற விடயங்கள் ஒன்றியப் பட்டியலில் ஒதுக்கப்பட்டுள்ளன. பொது ஒழுங்கு, உள்ளூர் அரசாங்கங்கள், சில வரிகள் ஆகியவை மாநிலப் பட்டியல் உள்ளன. பாராளுமன்றம் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தவிர, அந்த சட்டங்களை இயற்ற எந்த சக்தியும் கிடையாது.கல்வி, போக்குவரத்து, குற்றவியல் சட்டம் ஆகிய உடன்நிகழ்கிற பட்டியலில் உள்ள பாடங்களில் மாநில சட்டமன்றம் மற்றும்

நாடாளுமன்றம் சட்டங்களை இயற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது .எஞ்சியுள்ள அதிகாரங்கள் ஒன்றியத்தின் வசம் உள்ளது.மாநிலங்களின் பிரதிநிதிகளை கொண்டிருக்கும் மேல்சபையான மாநிலங்களவையில் மேல் கூட கூட்டாட்சி அரசாங்கம் முறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

**பாராளுமன்ற மக்களாட்சி**

இந்திய குடியரசு தலைவர், பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுபவர். நேரடியாக மக்களால் கிடையாது. பாராளுமன்றத்தில் இயற்றப்படும் நிர்வாகம் மற்றும் சட்டங்கள் அனைத்தும் அவர் பெயரில் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் இந்த அதிகாரங்கள் பெயரளவுக்கு மட்டுமே உள்ளன, குடியரசு தலைவர் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின் படி தான் செயல்பட வேண்டும். இதே போன்ற ஒரு அமைப்பு, நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்,முதல்வர் மீதும் அமைச்சர்கள் மீதும் தங்கள் கட்டுப்பாட்டை செலுத்தும் முறை தற்போது மாநிலங்களில் உள்ளது.

**சுதந்திரமான நீதித்துறை**

இந்திய நீதித்துறை, நிர்வாகிகள் முதல் பாராளுமன்றம் வரை அதன் கட்டுப்பாட்டை செலுத்த முடியும். நீதித்துறை அரசியல் பொருள் விளக்குபவராக செயல்படுகிறது. இரு மாநிலங்களுக்கு இடையிலோ,ஒரு மாநிலத்துக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையிலோ ஏற்படும் பிரச்சினைகளில் நடுநிலையாளராக செயல்படும். பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இயற்றப்பட்ட சட்டம் நீதிமுறை மேலாய்வுக்கு உட்பட்டது. அந்த சட்டம் அரசியலமைப்பு விதிகளை மீறுகிறது என்று நினைத்தால் நீதித்துறை அரசியலமைப்பில் அல்லாததாக அறிவிக்க முடியும்.

**சட்டங்களின் நீதிமுறை மேலாய்வு**

நீதிமுறை மேலாய்வை அமெரிக்காவின் அரசியலமைப்பிலிருந்து இந்திய அரசியலமைப்பு பயன்படுத்திக்கொண்டது. நீதிமன்ற உறுப்புரை 13 கீழ் நீதிமுறை மேலாய்வு செயல்படுகிறது. நீதிமன்ற அரசியலமைப்பு நாட்டின் உச்ச சக்தி மற்றும் அனைத்து சட்டங்களும் அதன் மேலாதிக்கத்தின் கீழ் என்பதை குறிக்கிறது. உறுப்புரை 13 கூறுவதாவது, 1. அனைத்து முன் அரசியலமைப்பு சட்டங்களும் பின்னர் அரசியலமைப்பு சட்ட விதிகளுடன் மோதல்கள் ஏற்பட்டால், அரசியலமைப்பின் விதிகள் அதற்கு ஏற்றதாக மாற்றப்படும் வரை செயல்படுத்த படாமல் இருக்கும். இது டாற்றின் ஆப் எலிப்ஸ் கொள்கை என்று அழைக்கப்படுகிறது. 2. இதே முறையில், அரசமைப்பு மன்றத்தால் அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டதிலிருந்து இயற்றபடும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு இணக்கத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும், இல்லையெனில் சட்டங்கள் மற்றும் திருத்தங்களை வய்டு-அ பி-இனிடியோ வேண்டும் என கருதப்படுகிறது.

**ஒன்றிய அரசு நிர்வாகக் குழு**

குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், ஒன்றிய அமைச்சரவை, பாராளுமன்றம் ஆகியவற்றைக் கொண்டதாக ஒன்றிய அரசு நிர்வாகக் குழு அமையும்.

**குடியரசுத் தலைவர் (President of India)**

இந்தியக் குடியரசுத் தலைவர்என்பவர் இந்தியக் குடியரசு எனப்பட்ட "இந்திய அரசின் தலைவர்" ஆவார். ஒன்றிய அரசு நிர்வாகக் குழுவின் தலைவரும், கூட்டாட்சி நிர்வாகத்தின் தலைவரும், இந்திய இராணுவத்தின் முப்படைகளின் தலைமைத் தளபதியும் ஆவார். 'இந்தியாவின் முதல் குடிமகன்' என்றும் அவர் குறிப்பிடப்படுகிறார்.

**குடியரசுத் துணைத் தலைவர்**

இந்தியாவின் இரண்டாவது மிக உயர் பதவிக்குரியதாகும், குடியரசுத் தலைவருக்கு அடுத்த நிலையில் வரும் பதவியாகும். துணைக்குடியரசுத்தலைவரே நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைத் தலைவராவார். எனினும் இவருக்கு மாநிலங்களவை வாக்கெடுப்பில் வாக்களிக்கும் உரிமை இல்லை. ஏனெனில் இவர் மாநிலங்களவை உறுப்பினர் அல்லர். எனினும் வாக்குகள் சமநிலையில் இருக்கும் போது இவர் வாக்களிக்கலாம்.

**பாராளுமன்றம்**

அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் உள்ளதைப்போல் இந்தியாவிலும் பாராளுமன்றம் ஈரவை கொண்ட அமைப்பாக விளங்குகிறது. முதலாம் மன்றம் அல்லது கீழவை அல்லது மக்களவை (First Chamber or Lower House or House of the People) என்ற அவை மக்களை பிரதிநித்துவப்படுதுகிறது. இரண்டாம் மன்றம் அல்லது மேலவை அல்லது மாநிலங்களவை (Second Chamber or Upper House or Council of the States) என அழைக்கப்படும் இரண்டாவது அவை இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள மாநிலங்களையும் மற்றும் ஒன்றிய அரசின் ஆளுகைப்பகுதிகளையும் பிரதிநித்துவப்படுத்துகிறது. இது தவிர குடியரசுத்தலைவர் இந்தியப் பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறார்.

**மாநிலங்களவை**

மாநிலங்களவையின் 238 உறுப்பினர்கள் மாநில-யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேலும் 12 உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றார்கள். இவர்கள் ஆறு வருடங்களுக்கு

பணிபுரிவார்கள். மூன்றில் ஒரு பகுதி மாநிலங்களவை உறுப்பினர்கள் இரு வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**மக்களவை**

மக்களவை, மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் 543 உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்களையும் கொண்டிருக்கின்றது. மக்களவைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும்.

**நாடாளுமன்ற அரசு**

நாடாளுமன்ற அரசு இந்தியாவில் ஐக்கிய இராச்சிய அரசு முறையை பின்பற்றி செயற்படுகின்றது, (வெஸ்ட் மினிஸ்டர் முறை). சட்டமியற்றும் இடமாக நாடாளுமன்றம் செயல்படுகின்றது. இது இரண்டு அவைகளை கொண்டுள்ளது. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களான 545 உறுப்பினர்கள் மக்களவையில் (கீழவை) செயல்படுகின்றனர். மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 250 உறுப்பினர்கள் மாநிலங்களவையில் (மேல் சபை) செயல்படுகின்றனர். அரசியலைமைப்பின் தலைவராக குடியரசுத் தலைவர் செயல்படுகின்றார். அரசின் தலைவாராக பிரதமர் மற்றும் அவர் அமைச்சரவையும் செயல்படுகின்றனர்.

**<u>நீதித்துறை</u>**

நீதித்துறை படிநிலையில் - முதலில் இந்திய உச்ச நீதிமன்றம், அதன் பிறகு அந்தந்த மாநிலங்களின் உயர் நீதிமன்றங்கள், அதன் பிறகு ஒவ்வொரு மாவட்டங்களிலும் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் மற்றும் உரிமையியல் நீதிபதி. இந்திய நீதித்துறைதனிநபர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு இடையே ஏற்படும் வேறுபாடுகள் உட்பட அனைத்து வகை வழக்குகள் மற்றும் உள்நாட்டு விவகாரங்களை பரிசீலிக்கிறது. இந்திய நீதித்துறை உறுப்பினர்கள், அரசாங்கத்தின் நிர்வாக மற்றும் சட்ட கிளைகளிடம் இருந்து சுதந்திரமாகச் செயல்படுகின்றனர்.

**அரசியலமைப்பு திருத்தம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தும் (Amendment) முறை பிரிவு 368 ல் கூறப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ப அரசியலமைப்பை மாற்றி அதனை உயிரோட்டமுள்ள சட்டமாக அமைய இப்பிரிவு வகை செய்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவது குறித்த வழிமுறைகள் பிரிவு 368-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் புதிதாக வரும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் அமைய வேண்டும். இதற்கு ஏதுவாக அரசியலமைப்புச் சட்டத்தின் இப்பிரிவு தேவைப்படும் பொழுது தேவைப்படும்

வண்ணம் திருத்தியமைக்க வழிசெய்கிறது. எதிர்காலத்தில் என்ன என்ன இடையூறுகள்வரும் என்று அனைத்தையும் எதிர்பார்த்து அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைப்பது இயலாத காரியம் ஆதலால் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவதற்குறிய வழிமுறை முக்கியத்தை அடைகிறது. அரசியலமைப்புச் சட்டம் ஒரு நாட்டின் அரசிற்கு முதுகெலும்பைப் போன்றது. இதை எளிதில் மாற்ற முடியுமென்றால் நாட்டின் உறுதித்தன்மையை இழக்க நேரிடும். அதுபோலவே அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவது இயலாது என்ற நிலையும் இயற்கைக்கு பொருத்தமல்ல. மாறிவரும் சூழ்னிலைகளுக்கேற்ப அவைகளை எதிர் கொள்ளும் வகையில் இச்சட்டம் அமைய வேண்டும். ஆதலால் மாற்றவேமுடியாது அல்லது சுலபமாக மாற்றிவிடலாம் என்ற இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் திருத்தும் முறை அமையவேண்டும். எளிதில் திருத்த இயலாததாகவும் ஒருசில கட்டுப்பாடுகளுடனும் திருத்த வழிசெய்வதாகவும் இருக்க வேண்டும். இதனடிப்படையில்தான் பிரிவு 368 வடிவமைக்கப்பட்டுள்ளது.